# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2010

## மதிப்பீட்டு அறிக்கை

# 33 - வரலாறு

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2010

# மதிப்பீட்டு அறிக்கை

## 33 - வரலாறு

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**முழுப்பதிப்புரிமையுடையது.**

**வரலாறு**

மதிப்பீட்டு அறிக்கை - க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2010

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

# அறிமுகம்

இலங்கையில் நடைபெறும் பரீட்சைகளில் அதிக அளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் க.பொ.த. (சா.தர)ப் பரீட்சைக்கே தோற்றுகின்றனர். தேசிய மட்டத்தில் நடைபெறும் இப்பரீட்சைப் பெறுபேறுகளினால் பெறப்படும் சான்றிதழ் உயர்கல்விக்கான தகுதியைப் பெறுவதற்கு மட்டுமன்றி நடுத்தர மட்டத்தில் தொழில் வாய்ப்புகளைப் பெறுவதற்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்கலைக்கழகங்களின் சில கற்கைநெறிகளைப் பயிலுவதற்கான அடிப்படைத் தகைமையை அளவிடும் அளவுகோலாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு நம்பகம், தகுதி ஆகியவற்றுடன் உயர்தரமும் காரணங்களாகும்.

இப்பரீட்சையில் உயர் அடைவினைப் பெறுவதற்காக மாணவர்களும், அந்த எதிர்பார்ப்பை நிறைவு செய்வதற்காக ஆசிரியர்களும் பெற்றோர்களும் அதிக முயற்சியை மேற்கொள்கின்றனர். அவர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையிலும் அதற்கு உதவும் முகமாகவும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் இந்த மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடத்துக்கான கல்விப்பணிப்பாளர்கள் அனைவருக்கும் பயனுள்ளதென்பதில் ஐயமில்லை. ஆகவே இதனை நூலகத்தில் பேணுதல் மிகப் பொருத்தமானதாகும்.

இந்த மதிப்பீட்டு அறிக்கை மூன்று பகுதிகளைக் கொண்டது. பகுதி I இல், வினாப்பத்திரம் ரீதியாக பாட இலக்குகள், பாட அடைவு பற்றிய தகவல்கள், மாவட்டம், கல்வி வலயம் என்பவற்றிற்கேற்பத் தரப்பட்டுள்ளன. பகுதி II இல், முதலாம் இரண்டாம் வினாப்பத்திரத்தின் எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும் விடைகள் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் வழிகாட்டல்களும் அடங்கியுள்ளன. பகுதி III இல் விடை எழுதும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்களும் கற்றல் - கற்பித்தல் பணி பற்றிய கருத்துக்களும் ஆலோசனைகளும் அடங்கியுள்ளன. பல்வேறு தேர்ச்சிகளும் அத்தேர்ச்சி மட்டங்களை அணுகுவதற்கு கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைக்க வேண்டிய முறைகள் பற்றியும் உங்களுக்கு துணைபுரியக் கூடிய அம்சங்களும் தரப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் பண்புத்தர விருத்திக்காகப் பயனுள்ள கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எங்களுக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்வதுடன் இதனைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட பிரதான பரீட்சகர்களுக்கும் இலங்கைப் பரீட்சைத் திணைக்கள அலுவலர்களுக்கும் இச்செயற்குழுவினர் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனுர எதிரிசிங்க
பரீட்சை ஆணையாளர் நாயகம்

2011 ஒக்டோபர் 20
ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை,
பத்தரமுல்ல.

| | | |
|---|---|---|
| வழிகாட்டல் | - | திரு. திரு. டப்ளியு.எம்.என்.ஜே. புஸ்பகுமார<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும் | - | திருமதி. கயாத்திரி அபேகுணசேகர<br>பரீட்சை ஆணையாளர்<br>(ஆய்வு அபிவிருத்திக் கிளை) |
| இணைப்பும் தொகுப்பும் | - | திரு. எஸ்.என். பிரேமதிலக<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர்<br><br>திருமதி. மை.ஜீவராணிபுனிதா<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| ஆக்கக் குழு | - | திருமதி. எஸ்.டீ.எஸ். வீரக்கொடி<br>ஆசிரியர் சேவை - I<br>வேல்ஸ் குமார வித்தியாலயம்,<br>மொரட்டுவ<br><br>திருமதி. டபிள்யு.ஏ. பிரேமலதா<br>ஆசிரியர் சேவை - I<br>இர/ அகலியகொட தர்மபால ம. வி.<br>அகலியகொட<br><br>திருமதி. நிர்மலா முத்தையா<br>ஆசிரியர் சேவை - I<br>கொ/ இந்துக் கல்லூரி<br>கொழும்பு 04 |
| கணனி பக்க வடிவமைப்பு | - | திரு. பொ.அற்புதரூபன்<br>முகாமைத்துவ உதவியாளர்<br><br>செல்வி. றஹீனா ஹாசிம்<br>கணனி தரவுப் பதிவாளர் |

# உள்ளடக்கம்


**பகுதி** I | **பக்க எண்**

1.0 **பாடக் குறிக்கோள்களும் பாட அடைவும்**

1.1 **பாடக் குறிக்கோள்கள்** 1

1.2 **பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்**

1.2.1. இப்பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2

1.2.2. பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 2

1.2.3 மாவட்டங்களின் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 3

1.2.4 கல்வி வலயங்களின் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 4

1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம் 7

**1.3.** **பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு**

1.3.1 வினாப்பத்திரம் I இல் பெறப்பட்டுள்ள அடைவு 8

1.3.2 வினாப்பத்திரம் II வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 9

1.3.3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 9

1.3.4 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு 10

**பகுதி** II

2.0 **வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**

2.1 **வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளித்தமை தொடர்பான விபரங்களும்**

2.1.1 வினாப்பத்திரம் I - கட்டமைப்பு 13

2.1.2 வினாப்பத்திரம் I 14

2.1.3. வினாப்பத்திரம் I - புள்ளி வழங்கும் திட்டம் 18

2.1.4 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்டுள்ள விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் 19

2.2 **வினாப்பத்திரம் II உம் அதற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**

2.2.1 வினாப்பத்திரம் II - கட்டமைப்பு 22

2.2.2 வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும் 23

**பகுதி III**

3.0 **விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்**

3.1 **விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்கள்** 46

3.2 **கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துகளும் ஆலோசனைகளும்** 47

## பகுதி I

# 1.0 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவும்

## 1.1 பாடக் குறிக்கோள்கள்

- ★ வரலாற்றின் பரம்பலையும் அதன் முக்கியத்துவத்தையும் விளக்குவார்.
- ★ நிகழ்காலத்தைப் புரிந்து கொள்வதற்காக இறந்த காலம் பற்றி விமர்சன ரீதியில் நோக்குவார்.
- ★ தேசிய பிரச்சினைகளின் போது நடுநிலையாகச் செயற்படுதல்
- ★ முக்கியமான வரலாற்று நாயகர்களை முன்மாதிரியாகக் கொண்டு செயற்படுவார்.
- ★ தேசியத்தின் தனித்துவத்தை அறிந்து கொண்டு அதனை மதித்து நடப்பார்.
- ★ வரலாற்று அனுபவங்களை நிகழ்கால நன்மைக்காக பயனுள்ள வகையில் பயன்படுத்துவார்.
- ★ இலங்கையின் வரலாறு தொடர்பில் பெருமிதத்துடன் செயற்படுவார்.
- ★ ஆய்ந்தோய்ந்தும் விமர்சன ரீதியாகவும் சிந்திக்கும் ஆற்றலை விருத்தி செய்து கொள்வார்.
- ★ வரலாற்றுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இடங்களை அடையாளப்படுத்தும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளல்.

## 1.2. பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்

### 1.2.1 பரீட்சைக்குத் தோற்றியோர் தொகை

| மொழி | பாடசாலை | தனிப்பட்ட | மொத்தம் |
|---|---|---|---|
| சிங்களம் | 240,155 | 6,335 | 246,490 |
| தமிழ் | 65,480 | 10,455 | 75,935 |
| ஆங்கிலம் | 7,555 | 2,175 | 9,730 |
| மொத்தம் | **313,190** | **18,965** | **332,155** |

**அட்டவணை 1**

### 1.2.2 தரங்கள் பெறப்பட்ட விதம்

| தரம் | பாடசாலைப் பரீட்சார்த்தி | | தனிப்பட்ட பரீட்சார்த்தி | | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | | |
| A | 25,737 | 8.22 | 178 | 0.94 | 25,915 | 7.80 |
| B | 24,159 | 7.71 | 320 | 1.69 | 24,479 | 7.37 |
| C | 79,359 | 25.34 | 2,826 | 14.90 | 82,185 | 24.74 |
| S | 101,508 | 32.41 | 8,257 | 43.54 | 109,765 | 33.05 |
| W | 82,427 | 26.32 | 7,384 | 38.93 | 89,811 | 27.04 |
| மொத்தம் | **313,190** | **100** | **18,965** | **100** | **332,155** | **100** |

**அட்டவணை 2**

1.2.3 மாவட்டங்கள் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள முறை:

| மாவட்டம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி ( S ) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 29088 | 5543 | 19.06 | 3606 | 12.40 | 7982 | 27.44 | 6898 | 23.71 | 24029 | 82.61 | 5059 | 17.39 |
| 2. கம்பஹா | 24737 | 2938 | 11.88 | 2461 | 9.95 | 6672 | 26.97 | 6987 | 28.25 | 19058 | 77.04 | 5679 | 22.96 |
| 2. கம்பஹா | 13924 | 1935 | 13.90 | 1586 | 11.39 | 3787 | 27.20 | 3766 | 27.05 | 11074 | 79.53 | 2850 | 20.47 |
| 4. கண்டி | 19742 | 1759 | 8.91 | 1664 | 8.43 | 5154 | 26.11 | 5910 | 29.94 | 14487 | 73.38 | 5255 | 26.62 |
| 5. மாத்தளை | 6648 | 485 | 7.30 | 498 | 7.49 | 1676 | 25.21 | 1990 | 29.93 | 4649 | 69.93 | 1999 | 30.07 |
| 6. நுவரெலியா | 9631 | 344 | 3.57 | 527 | 5.47 | 2194 | 22.78 | 3359 | 34.88 | 6424 | 66.70 | 3207 | 33.30 |
| 7. காலி | 15425 | 1858 | 12.05 | 1486 | 9.63 | 3939 | 25.54 | 4244 | 27.51 | 11527 | 74.73 | 3898 | 25.27 |
| 8. மாத்தறை | 14440 | 1714 | 11.87 | 1527 | 10.57 | 3989 | 27.62 | 3886 | 26.91 | 11116 | 76.98 | 3324 | 23.02 |
| 9. அம்பாந்தோட்டை | 6527 | 637 | 9.76 | 614 | 9.41 | 1701 | 26.06 | 1861 | 28.51 | 4813 | 73.74 | 1714 | 26.26 |
| 10. யாழ்ப்பாணம் | 8676 | 494 | 5.69 | 636 | 7.33 | 2068 | 23.84 | 2566 | 29.58 | 5764 | 66.44 | 2912 | 33.56 |
| 11. கிளிநொச்சி | 2071 | 18 | 0.87 | 53 | 2.56 | 303 | 14.63 | 594 | 28.68 | 968 | 46.74 | 1103 | 53.26 |
| 12. மன்னார் | 1401 | 24 | 1.71 | 72 | 5.14 | 341 | 24.34 | 499 | 35.62 | 936 | 66.81 | 465 | 33.19 |
| 13. வவுனியா | 2710 | 98 | 3.62 | 150 | 5.54 | 731 | 26.97 | 1021 | 37.68 | 2000 | 73.80 | 710 | 26.20 |
| 14. முல்லைத்தீவு | 1568 | 12 | 0.77 | 43 | 2.74 | 196 | 12.50 | 478 | 30.48 | 729 | 46.49 | 839 | 53.51 |
| 15. மட்டக்களப்பு | 6271 | 366 | 5.84 | 368 | 5.87 | 1540 | 24.56 | 2146 | 34.22 | 4420 | 70.48 | 1851 | 29.52 |
| 16. அம்பாறை | 9040 | 448 | 4.96 | 629 | 6.96 | 2740 | 30.31 | 3237 | 35.81 | 7054 | 78.03 | 1986 | 21.97 |
| 17. திருகோணமலை | 5450 | 243 | 4.46 | 337 | 6.18 | 1324 | 24.29 | 1954 | 35.85 | 3858 | 70.79 | 1592 | 29.21 |
| 18. குருநாகல் | 21745 | 1971 | 9.06 | 1958 | 9.00 | 6278 | 28.87 | 6534 | 30.05 | 16741 | 76.99 | 5004 | 23.01 |
| 19. புத்தளம் | 9469 | 634 | 6.70 | 710 | 7.50 | 2355 | 24.87 | 3109 | 32.83 | 6808 | 71.90 | 2661 | 28.10 |
| 20. அனுராதபுரம் | 11896 | 684 | 5.75 | 784 | 6.59 | 2996 | 25.18 | 3705 | 31.14 | 8169 | 68.67 | 3727 | 31.33 |
| 21. பொலன்னறுவை | 5420 | 327 | 6.03 | 355 | 6.55 | 1290 | 23.80 | 1711 | 31.57 | 3683 | 67.95 | 1737 | 32.05 |
| 22. பதுளை | 12205 | 725 | 5.94 | 891 | 7.30 | 3114 | 25.51 | 3876 | 31.76 | 8606 | 70.51 | 3599 | 29.49 |
| 23. மொனராகலை | 7127 | 271 | 3.80 | 399 | 5.60 | 1528 | 21.44 | 2141 | 30.04 | 4339 | 60.88 | 2788 | 39.12 |
| 24. இரத்தினபுரி | 14677 | 1119 | 7.62 | 1203 | 8.20 | 3769 | 25.68 | 4204 | 28.64 | 10295 | 70.14 | 4382 | 29.86 |
| 25. கேகாலை | 11029 | 984 | 8.92 | 1019 | 9.24 | 3163 | 28.68 | 3171 | 28.75 | 8337 | 75.59 | 2692 | 24.41 |
| **மொத்தம்** | **270917** | **25631** | **9.46** | **23576** | **8.70** | **70830** | **26.14** | **79847** | **29.47** | **199884** | **73.78** | **71033** | **26.22** |

**அட்டவணை 3**

## 1.2.4 கல்வி வலயங்கள் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள முறை :

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 13625 | 3341 | 24.52 | 1795 | 13.17 | 3435 | 25.21 | 2790 | 20.48 | 11361 | 83.38 | 2264 | 16.62 |
| 2. ஹோமாகம | 3388 | 350 | 10.33 | 345 | 10.18 | 904 | 26.68 | 922 | 27.21 | 2521 | 74.41 | 867 | 25.59 |
| 3. ஸ்ரீ ஜயவர்த்தனபுர | 6486 | 1053 | 16.23 | 798 | 12.30 | 1951 | 30.08 | 1662 | 25.62 | 5464 | 84.24 | 1022 | 15.76 |
| 4. பிலியந்தல | 5589 | 799 | 14.30 | 668 | 11.95 | 1692 | 30.27 | 1524 | 27.27 | 4683 | 83.79 | 906 | 16.21 |
| 5. கம்பஹா | 7004 | 1303 | 18.60 | 844 | 12.05 | 1917 | 27.37 | 1723 | 24.60 | 5787 | 82.62 | 1217 | 17.38 |
| 6 மினுவாங்கொட | 4590 | 363 | 7.91 | 435 | 9.48 | 1262 | 27.49 | 1363 | 29.69 | 3423 | 74.58 | 1167 | 25.42 |
| 7. நீர்கொழும்பு | 6737 | 649 | 9.63 | 535 | 7.94 | 1661 | 24.65 | 2008 | 29.81 | 4853 | 72.04 | 1884 | 27.96 |
| 8. களனி | 6406 | 623 | 9.73 | 647 | 10.10 | 1832 | 28.60 | 1893 | 29.55 | 4995 | 77.97 | 1411 | 22.03 |
| 9. களுத்துறை | 7050 | 921 | 13.06 | 770 | 10.92 | 1926 | 27.32 | 1984 | 28.14 | 5601 | 79.45 | 1449 | 20.55 |
| 10. மத்துகம | 2823 | 447 | 15.83 | 321 | 11.37 | 720 | 25.50 | 714 | 25.29 | 2202 | 78.00 | 621 | 22.00 |
| 11. ஹொரணை | 4051 | 567 | 14.00 | 495 | 12.22 | 1141 | 28.17 | 1068 | 26.36 | 3271 | 80.75 | 780 | 19.25 |
| 12. கண்டி | 6891 | 1282 | 18.60 | 899 | 13.05 | 1945 | 28.23 | 1616 | 23.45 | 5742 | 83.33 | 1149 | 16.67 |
| 13. தெனுவர | 2141 | 55 | 2.57 | 102 | 4.76 | 501 | 23.40 | 751 | 35.08 | 1409 | 65.81 | 732 | 34.19 |
| 14. கம்பளை | 3270 | 113 | 3.46 | 204 | 6.24 | 740 | 22.63 | 1124 | 34.37 | 2181 | 66.70 | 1089 | 33.30 |
| 15. தெல்தெனியா | 1849 | 54 | 2.92 | 87 | 4.71 | 425 | 22.99 | 586 | 31.69 | 1152 | 62.30 | 697 | 37.70 |
| 16. வத்தேகம | 2433 | 114 | 4.69 | 190 | 7.81 | 624 | 25.65 | 786 | 32.31 | 1714 | 70.45 | 719 | 29.55 |
| 17. கட்டுகஸ்தொட்ட | 3158 | 141 | 4.46 | 182 | 5.76 | 919 | 29.10 | 1047 | 33.15 | 2289 | 72.48 | 869 | 27.52 |
| 18. மாத்தளை | 3323 | 355 | 10.68 | 279 | 8.40 | 855 | 25.73 | 988 | 29.73 | 2477 | 74.54 | 846 | 25.46 |
| 19. கலேவெவ | 2168 | 88 | 4.06 | 139 | 6.41 | 553 | 25.51 | 653 | 30.12 | 1433 | 66.10 | 735 | 33.90 |
| 20. நாஉல | 578 | 36 | 6.23 | 51 | 8.82 | 169 | 29.24 | 158 | 27.34 | 414 | 71.63 | 164 | 28.37 |
| 21. வில்கமுவ | 579 | 6 | 1.04 | 29 | 5.01 | 99 | 17.10 | 191 | 32.99 | 325 | 56.13 | 254 | 43.87 |
| 22. நுவரெலியா | 2495 | 50 | 2.00 | 97 | 3.89 | 497 | 19.92 | 949 | 38.04 | 1593 | 63.85 | 902 | 36.15 |
| 23. கொத்மலை | 1314 | 56 | 4.26 | 85 | 6.47 | 301 | 22.91 | 453 | 34.47 | 895 | 68.11 | 419 | 31.89 |
| 24. ஹட்டன் | 2829 | 96 | 3.39 | 162 | 5.73 | 735 | 25.98 | 1001 | 35.38 | 1994 | 70.48 | 835 | 29.52 |
| 25. வலப்பனை | 1414 | 45 | 3.18 | 71 | 5.02 | 289 | 20.44 | 435 | 30.76 | 840 | 59.41 | 574 | 40.59 |
| 26. ஹங்குரன்கெத்த | 1579 | 97 | 6.14 | 112 | 7.09 | 372 | 23.56 | 521 | 33.00 | 1102 | 69.79 | 477 | 30.21 |
| 27. காலி | 6715 | 1221 | 18.18 | 769 | 11.45 | 1758 | 26.18 | 1636 | 24.36 | 5384 | 80.18 | 1331 | 19.82 |
| 28. எல்பிட்டிய | 3208 | 166 | 5.17 | 240 | 7.48 | 815 | 25.41 | 1031 | 32.14 | 2252 | 70.20 | 956 | 29.80 |
| 29. அம்பலாங்கொடை | 3544 | 368 | 10.38 | 333 | 9.40 | 895 | 25.25 | 966 | 27.26 | 2562 | 72.29 | 982 | 27.71 |
| 30. உடுகம | 1958 | 103 | 5.26 | 144 | 7.35 | 471 | 24.06 | 611 | 31.21 | 1329 | 67.88 | 629 | 32.12 |
| 31. மாத்தறை | 5069 | 956 | 18.86 | 662 | 13.06 | 1421 | 28.03 | 1138 | 22.45 | 4177 | 82.40 | 892 | 17.60 |
| 32. அக்குரஸ்ஸ | 2005 | 234 | 11.67 | 239 | 11.92 | 601 | 29.98 | 519 | 25.89 | 1593 | 79.45 | 412 | 20.55 |
| 33. முலடியன-ஹக்மன | 2222 | 166 | 7.47 | 212 | 9.54 | 633 | 28.49 | 686 | 30.87 | 1697 | 76.37 | 525 | 23.63 |
| 34. மொறவக்க | 2438 | 109 | 4.47 | 159 | 6.52 | 564 | 23.13 | 745 | 30.56 | 1577 | 64.68 | 861 | 35.32 |
| 35. தங்காலை | 2706 | 249 | 9.20 | 255 | 9.42 | 770 | 28.46 | 798 | 29.49 | 2072 | 76.57 | 634 | 23.43 |

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 36. அம்பாந்தோட்டை | 3902 | 241 | 6.18 | 302 | 7.74 | 1014 | 25.99 | 1170 | 29.98 | 2727 | 69.89 | 1175 | 30.11 |
| 37. வலஸ்முல்லை | 2625 | 396 | 15.09 | 312 | 11.89 | 687 | 26.17 | 691 | 26.32 | 2086 | 79.47 | 539 | 20.53 |
| 38. யாழ்ப்பாணம் | 3158 | 264 | 8.36 | 280 | 8.87 | 842 | 26.66 | 888 | 28.12 | 2274 | 72.01 | 884 | 27.99 |
| 39. தீவகம் | 606 | 6 | 0.99 | 14 | 2.31 | 75 | 12.38 | 193 | 31.85 | 288 | 47.52 | 318 | 52.48 |
| 40. தென்மராட்சி | 983 | 46 | 4.68 | 78 | 7.93 | 248 | 25.23 | 318 | 32.35 | 690 | 70.19 | 293 | 29.81 |
| 41. வலிகாமம் | 2398 | 84 | 3.50 | 161 | 6.71 | 550 | 22.94 | 746 | 31.11 | 1541 | 64.26 | 857 | 35.74 |
| 42. வடமராட்சி | 1531 | 94 | 6.14 | 103 | 6.73 | 353 | 23.06 | 421 | 27.50 | 971 | 63.42 | 560 | 36.58 |
| 43. கிளிநொச்சி | 2071 | 18 | 0.87 | 53 | 2.56 | 303 | 14.63 | 594 | 28.68 | 968 | 46.74 | 1103 | 53.26 |
| 44. மன்னார் | 1109 | 24 | 2.16 | 69 | 6.22 | 324 | 29.22 | 428 | 38.59 | 845 | 76.19 | 264 | 23.81 |
| 45. மடு | 292 | 0 | 0.00 | 3 | 1.03 | 17 | 5.82 | 71 | 24.32 | 91 | 31.16 | 201 | 68.84 |
| 46. வவுனியா - தெற்கு | 2124 | 95 | 4.47 | 141 | 6.64 | 630 | 29.66 | 802 | 37.76 | 1668 | 78.53 | 456 | 21.47 |
| 47. வவுனியா - வடக்கு | 586 | 3 | 0.51 | 9 | 1.54 | 101 | 17.24 | 219 | 37.37 | 332 | 56.66 | 254 | 43.34 |
| 48. முல்லைத்தீவு | 966 | 7 | 0.72 | 27 | 2.80 | 136 | 14.08 | 285 | 29.50 | 455 | 47.10 | 511 | 52.90 |
| 49. துணுக்காய் | 602 | 5 | 0.83 | 16 | 2.66 | 60 | 9.97 | 193 | 32.06 | 274 | 45.51 | 328 | 54.49 |
| 50. மட்டக்களப்பு | 2271 | 145 | 6.38 | 143 | 6.30 | 560 | 24.66 | 785 | 34.57 | 1633 | 71.91 | 638 | 28.09 |
| 51. கல்குடா | 1096 | 15 | 1.37 | 19 | 1.73 | 164 | 14.96 | 397 | 36.22 | 595 | 54.29 | 501 | 45.71 |
| 52. பட்டிருப்பு | 1598 | 65 | 4.07 | 80 | 5.01 | 376 | 23.53 | 544 | 34.04 | 1065 | 66.65 | 533 | 33.35 |
| 53. மட்டக்களப்பு -மத்தி | 1306 | 141 | 10.80 | 126 | 9.65 | 440 | 33.69 | 420 | 32.16 | 1127 | 86.29 | 179 | 13.71 |
| 54. அம்பாறை | 2493 | 129 | 5.17 | 214 | 8.58 | 767 | 30.77 | 823 | 33.01 | 1933 | 77.54 | 560 | 22.46 |
| 55. கல்முனை | 2029 | 158 | 7.79 | 164 | 8.08 | 689 | 33.96 | 683 | 33.66 | 1694 | 83.49 | 335 | 16.51 |
| 56. சம்மாந்துறை | 1086 | 56 | 5.16 | 77 | 7.09 | 304 | 27.99 | 418 | 38.49 | 855 | 78.73 | 231 | 21.27 |
| 57. மஹாஓய | 502 | 8 | 1.59 | 32 | 6.37 | 125 | 24.90 | 182 | 36.25 | 347 | 69.12 | 155 | 30.88 |
| 58. தெஹியத்தகண்டிய | 1100 | 28 | 2.55 | 68 | 6.18 | 307 | 27.91 | 325 | 29.55 | 728 | 66.18 | 372 | 33.82 |
| 59. அக்கரைப்பற்று | 1830 | 69 | 3.77 | 74 | 4.04 | 548 | 29.95 | 806 | 44.04 | 1497 | 81.80 | 333 | 18.20 |
| 60. திருகோணமலை | 1931 | 147 | 7.61 | 176 | 9.11 | 544 | 28.17 | 601 | 31.12 | 1468 | 76.02 | 463 | 23.98 |
| 61. மூதூர் | 1015 | 46 | 4.53 | 51 | 5.02 | 218 | 21.48 | 399 | 39.31 | 714 | 70.34 | 301 | 29.66 |
| 62. கந்தளாய் | 1180 | 15 | 1.27 | 52 | 4.41 | 286 | 24.24 | 418 | 35.42 | 771 | 65.34 | 409 | 34.66 |
| 63. கிண்ணியா | 1324 | 35 | 2.64 | 58 | 4.38 | 276 | 20.85 | 536 | 40.48 | 905 | 68.35 | 419 | 31.65 |
| 64. குருநாகல் | 5019 | 724 | 14.43 | 562 | 11.20 | 1545 | 30.78 | 1330 | 26.50 | 4161 | 82.90 | 858 | 17.10 |
| 65. குளியாப்பிட்டிய | 3717 | 369 | 9.93 | 337 | 9.07 | 1008 | 27.12 | 1167 | 31.40 | 2881 | 77.51 | 836 | 22.49 |
| 66 நிக்கவெரட்டிய | 2927 | 175 | 5.98 | 223 | 7.62 | 863 | 29.48 | 959 | 32.76 | 2220 | 75.85 | 707 | 24.15 |
| 67. மாகோ | 3590 | 152 | 4.23 | 233 | 6.49 | 971 | 27.05 | 1178 | 32.81 | 2534 | 70.58 | 1056 | 29.42 |
| 68. கிரியுள்ள | 3765 | 332 | 8.82 | 328 | 8.71 | 1130 | 30.01 | 1089 | 28.92 | 2879 | 76.47 | 886 | 23.53 |
| 69. இப்பாகமுவ | 2727 | 219 | 8.03 | 275 | 10.08 | 761 | 27.91 | 811 | 29.74 | 2066 | 75.76 | 661 | 24.24 |
| 70. புத்தளம் | 4428 | 212 | 4.79 | 264 | 5.96 | 1146 | 25.88 | 1552 | 35.05 | 3174 | 71.68 | 1254 | 28.32 |
| 71. சிலாபம் | 5041 | 422 | 8.37 | 446 | 8.85 | 1209 | 23.98 | 1557 | 30.89 | 3634 | 72.09 | 1407 | 27.91 |
| 72. அனுராதபுரம் | 4083 | 416 | 10.19 | 341 | 8.35 | 1121 | 27.46 | 1196 | 29.29 | 3074 | 75.29 | 1009 | 24.71 |

| மாவட்டம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 73. தபுத்தேகம | 2237 | 87 | 3.89 | 145 | 6.48 | 534 | 23.87 | 686 | 30.67 | 1452 | 64.91 | 785 | 35.09 |
| 74. கெக்கிராவ | 2333 | 90 | 3.86 | 127 | 5.44 | 609 | 26.10 | 709 | 30.39 | 1535 | 65.80 | 798 | 34.20 |
| 75. கலென்பின்துனுவெவ | 1454 | 43 | 2.96 | 84 | 5.78 | 357 | 24.55 | 520 | 35.76 | 1004 | 69.05 | 450 | 30.95 |
| 76. கெபித்திகொல்லாவ | 1789 | 48 | 2.68 | 87 | 4.86 | 375 | 20.96 | 594 | 33.20 | 1104 | 61.71 | 685 | 38.29 |
| 77. பொலன்னறுவ | 1655 | 149 | 9.00 | 149 | 9.00 | 416 | 25.14 | 487 | 29.43 | 1201 | 72.57 | 454 | 27.43 |
| 78. ஹிங்குரக் கொடை | 2221 | 140 | 6.30 | 146 | 6.57 | 530 | 23.86 | 659 | 29.67 | 1475 | 66.41 | 746 | 33.59 |
| 79. திம்புலாகல | 1544 | 38 | 2.46 | 60 | 3.89 | 344 | 22.28 | 565 | 36.59 | 1007 | 65.22 | 537 | 34.78 |
| 80. பதுளை | 3399 | 234 | 6.88 | 296 | 8.71 | 846 | 24.89 | 1068 | 31.42 | 2444 | 71.90 | 955 | 28.10 |
| 81. பண்டாரவளை | 2989 | 292 | 9.77 | 277 | 9.27 | 857 | 28.67 | 876 | 29.31 | 2302 | 77.02 | 687 | 22.98 |
| 82. மஹியங்கனை | 2061 | 89 | 4.32 | 107 | 5.19 | 458 | 22.22 | 649 | 31.49 | 1303 | 63.22 | 758 | 36.78 |
| 83. வெலிமடை | 2616 | 78 | 2.98 | 152 | 5.81 | 710 | 27.14 | 896 | 34.25 | 1836 | 70.18 | 780 | 29.82 |
| 84. பசறை | 1140 | 32 | 2.81 | 59 | 5.18 | 243 | 21.32 | 387 | 33.95 | 721 | 63.25 | 419 | 36.75 |
| 85. மொனராகலை | 2236 | 88 | 3.94 | 118 | 5.28 | 462 | 20.66 | 666 | 29.79 | 1334 | 59.66 | 902 | 40.34 |
| 86. வெல்லவாய | 3139 | 131 | 4.17 | 181 | 5.77 | 680 | 21.66 | 951 | 30.30 | 1943 | 61.90 | 1196 | 38.10 |
| 87. பிபிலை | 1752 | 52 | 2.97 | 100 | 5.71 | 386 | 22.03 | 524 | 29.91 | 1062 | 60.62 | 690 | 39.38 |
| 88. இரத்தினபுரி | 5750 | 629 | 10.94 | 540 | 9.39 | 1544 | 26.85 | 1527 | 26.56 | 4240 | 73.74 | 1510 | 26.26 |
| 89. பலாங்கொடை | 2764 | 163 | 5.90 | 231 | 8.36 | 724 | 26.19 | 828 | 29.96 | 1946 | 70.41 | 818 | 29.59 |
| 90. நிவித்திகல | 2524 | 89 | 3.53 | 161 | 6.38 | 585 | 23.18 | 805 | 31.89 | 1640 | 64.98 | 884 | 35.02 |
| 91. எம்பிலிபிடிய | 3639 | 238 | 6.54 | 271 | 7.45 | 916 | 25.17 | 1044 | 28.69 | 2469 | 67.85 | 1170 | 32.15 |
| 92. கேகாலை | 4289 | 561 | 13.08 | 449 | 10.47 | 1204 | 28.07 | 1147 | 26.74 | 3361 | 78.36 | 928 | 21.64 |
| 93. மாவனல்லை | 3551 | 243 | 6.84 | 324 | 9.12 | 1065 | 29.99 | 1024 | 28.84 | 2656 | 74.80 | 895 | 25.20 |
| 94. தெஹிஓவிட்ட | 3189 | 180 | 5.64 | 246 | 7.71 | 894 | 28.03 | 1000 | 31.36 | 2320 | 72.75 | 869 | 27.25 |
| மொத்தம் | **270917** | **25631** | **9.46** | **23576** | **8.70** | **70830** | **26.14** | **79847** | **29.47** | **199884** | **73.78** | **71033** | **26.22** |

**அட்டவணை 4**

### 1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம்

| வகுப்பாயிடை | மீடிறன் | சதவீத மீடிறன் | திரள் மீடிறன் | சதவீத திரள் மீடிறன் |
|---|---|---|---|---|
| 91 - 100 | 1023 | 0.31 | 332155 | 100.00 |
| 81 - 90 | 7378 | 2.22 | 331132 | 99.69 |
| 71 - 80 | 15579 | 4.69 | 323754 | 97.47 |
| 61 - 70 | 23356 | 7.03 | 308175 | 92.78 |
| 51 - 60 | 37879 | 11.40 | 284819 | 85.75 |
| 41 - 50 | 54110 | 16.30 | 246940 | 74.34 |
| 31 - 40 | 77930 | 23.50 | 192830 | 58.05 |
| 21 - 30 | 77967 | 23.50 | 114900 | 34.59 |
| 11 - 20 | 34878 | 10.50 | 36933 | 11.12 |
| 01 - 10 | 2021 | 0.61 | 2055 | 0.62 |
| 00 - 00 | 34 | 0.01 | 34 | 0.01 |

**அட்டவணை 5**


மேலே தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தகவல்களைப் பெறும் விதம் கீழே தரப்பட்டுள்ளது.

உதாரணம் : (31 - 40 க்கு இடைப்பட்ட புள்ளிகளின் வீச்சினைக் கொள்ளும்போது,).
இப்பாடத்தில் 31-40 க்கு இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் 77930 உள்ளனர். இது 23.5% ஆகும். 40 புள்ளிக்கு குறைவாக எடுத்த மாணவர்கள் 192830 பேர் உள்ளனர். இது 58.05% ஆகும்.

## 1.3. பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு

### 1.3.1 வினாப்பத்திரம் 1 இல் பெறப்பட்டுள்ள அடைவு

**க. பொ. த. (சா.தர)ப் பரீட்சை - 2010**
**33 - வரலாறு - வினாப்பத்திரம் I**
**வினாக்களுக்குச் சரியாக விடையளிக்கப்பட்டுள்ள விதம்**





**வரைபு** 1

இது RD/16/05/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.
மேலே தரப்பட்ட வரைபடத்திலிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகிறது.

உதாரணம் :- மேலே உள்ள வரைபின்படி முதலாம் வினாவிற்கு 65% ஆனவர்கள் சரியாக விடையளித்துள்ளனர். 5 ஆம் வினாவிற்கு 15% பரீட்சார்த்திகள் மட்டுமே சரியாக விடையளித்துள்ளனர். இதன்படி 5 ஆம் வினா கடினத்தன்மை வாய்ந்ததாகக் காணப்படுகிறது.

### 1.3.2 வினாப்பத்திரம் II - வினாக்கள் தெரிவு செய்யப்பட்ட விதம்.





**வரைபு 2** - RD/16/02/OL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்

இது RD/16/02/OL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம் :- விடை எழுதுவதற்கு வினாக்களை தேர்ந்தெடுக்கும்போது 2ஆவது வினாவினை 92%னரும், 3ஆவது வினாவினை 83%னரும் தேர்ந்தெடுத்துள்ளனர்.

### 1.3. 3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெற்றுள்ள விதம்




**வரைபு 3** - RD/16/02/OL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்


RD/16/02/OL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு வரைபு 3 தயாரிக்கப்பட்டது. இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகின்றது.

உதாரணம்:-

1ஆம் வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 30 ஆகும். புள்ளி வீச்சு 00-25% இற்கிடையில் (0-7 புள்ளிகள்) 23%த்தினரும், புள்ளி வீச்சு 26-50% இற்கிடையில் (8-15 புள்ளிகள்) 51%த்தினரும்,புள்ளி வீச்சு 51-75% இற்கிடையில் (16-22 புள்ளிகள்) 21%த்தினரும், புள்ளி வீச்சு 76-100% இற்கிடையில் (23-30 புள்ளிகள்) 5%த்தினரும் பெற்றுள்ளனர்.

## 1.3.4 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு


**க. பொ. த. (சா.தர)ப் பரீட்சை - 2010**
**33 - வரலாறு - வினாப்பத்திரம் II**
**பிரிவு வினாக்களுக்குச் சரியாக விடையளிக்கப்பட்டுள்ள விதம்**




வரைபு 4.1

(RD/16/05/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகின்றது.


உதாரணம் :- வினா 1 இன் (அ) i பிரிவுக்கு 27% பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ளனர். (அ) ii பிரிவுக்கு 17% மானவர்கள் மட்டுமே சரியாக விடையளித்துள்ளனர்.



க. பொ. த. (சா.தர)ப் பரீட்சை - 2010
33 - வரலாறு - வினாப்பத்திரம் II
பிரிவு வினாக்களுக்குச் சரியாக விடையளிக்கப்பட்டுள்ள விதம்
சதவீதம்
100
90
80
70
60
50
40
30
20
10
0
A B C A B C D
i ii iii iv
2
A B C D
i ii iii iv
3
A B C A B C D
i ii iii iv
4
A B C A B
i ii iii iv
5
A B C
i ii iii iv
6
வினா இலக்கம் - பிரிவுகளும் உப பிரிவுகளும்


வரைபு 4.2

**க. பொ. த. (சா.தர)ப் பரீட்சை - 2010**
**33 - வரலாறு - வினாப்பத்திரம் II**
**பிரிவு வினாக்களுக்குச் சரியாக விடையளிக்கப்பட்டுள்ள விதம்**




வரைபு 4.3

# பகுதி II

## 2.0 வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்

## 2.1 வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

### 2.1.1 வினாப்பத்திரம் I - கட்டமைப்பு

நேரம் : 1 மணித்தியாலம் மொத்தப்புள்ளிகள் 80

- ✶ 40 பல்தேர்வு வினாக்கள் கொண்டது.
- ✶ எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் கட்டாயமாகும்.
- ✶ 1-40 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட (1), (2), (3), (4) விடைகளுள் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்தல் வேண்டும்.

## 2.1.2 வினாப்பத்திரம் I

1. வரலாறு ஒரு தனிப் பாடமன்று; எல்லாப் பாடங்களும் அடங்கும் ஒரு கூட்டாகும் என எடுத்துரைத்த வரலாற்று ஆசிரியர்
   (1) ஜீ. எம். திரெவெலியன் (2) ஈ. எச். கார்
   (3) எச். ஜீ. வெல்ஸ் (4) ரீ. எஸ். எலியற்

2. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் பற்றிய தகவல்களை வெளிப்படுத்தத்தக்க மூலம் பின்வருவனவற்றில் யாது ?
   (1) பொறிப்பு (சாசனம்) (2) மகாவம்சம் (3) கற்கருவிகள் (4) கட்டடத்தின் சிதைவுகள்

3. 15 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் யாழ்ப்பாணப் பிரதேசம் விஜயநகரப் பேரரசிற்குக் கீழ்ப்பட்டிருந்தமை பற்றிய தகவல்களைக் குறிப்பிடும் மூலம் பின்வருவனவற்றில் யாது ?
   (1) பனாக்கடுவாச் செப்புப் பட்டயம் (2) ஆலம்புண்டிச் செப்புப் பட்டயம்
   (3) வல்லிபுரம் பொற் பட்டயம் (4) செகராஜசேகர மாலை என்னும் நூல்

4. I ஆம் பராக்கிரமபாகுவிற்கும் II ஆம் கஜபாகுவிற்குமிடையே ஏற்பட்ட வரலாற்றுரீதியான சமாதான உடன்படிக்கை பற்றிக் குறிப்பிடப்படுவது
   (1) சங்கமுவிகாரைச் சாசனத்தில் (2) கல்பொத்தச் சாசனத்தில்
   (3) தெவனகலச் சாசனத்தில் (4) ஹபெஸ்ஸச் சாசனத்தில்

5. கோணநதியின் ஆற்றுமுகத்தில் அமைந்திருந்த பண்டைய துறைமுகம்
   (1) உருவேல (2) மகாதித்த (3) கொடவாயா (4) கோகண்ண

6. கதம்ப நதி, கோண நதி, வன நதி என்னும் ஆறுகளின் தற்காலப் பெயர்கள் முறையே இடம்பெறும் விடை யாது ?
   (1) மல்வத்து ஓயா, கலா ஓயா, வளவை கங்கை (2) மல்வத்து ஓயா, தெதுரு ஓயா, கல்லோயா
   (3) கலா ஓயா, வளவை கங்கை, கணதரா ஓயா (4) கணதார ஓயா, கலா ஓயா, மல்வத்து ஓயா

7. அனுராதபுரத்தைச் சகல அம்சங்களும் பொருந்திய தலைநகராக மாற்றிய அரசர் யார் ?
   (1) விஜயன் (2) தேவநம்பியதீசன் (3) பண்டுகாபன் (4) துட்டுகைமுனு

8. இருக்கு வேத வைதிக ஆரியர்களின் சமயப் பற்றுறுதிகளினதும் நம்பிக்கைகளினதும் முனைப்பான அம்சம்
   (1) இயற்கைப் பொருள்களைத் தெய்வங்களாகக் கருதுதல்
   (2) பிரமா, விஷ்ணு, ஈஸ்வரன் என்ற இந்து மும்மூர்த்திகள் மீது உள்ள நம்பிக்கை
   (3) தாய்த் தெய்வங்களை வணங்குதல்
   (4) தியான முறைகளுக்கும் தவத்திற்கும் முக்கியத்துவம் அளித்தல்

9. கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் உருவாகிய பதினாறு குடியிருப்புகளில் குடியரசுகளாக அல்லது 'கண' இராச்சியங்களாகக் கருதப்பட்ட இரு இராச்சியங்கள்
   (1) மகத, கோசல ஆகியன (2) அவந்தி, வத்ச ஆகியன
   (3) வஜ்ஜி, மல்ல ஆகியன (4) குரு, பாஞ்சாலம் ஆகியன

10. மகத இராச்சியத்தை ஆட்சிசெய்த காலத்திற்கேற்பப் பின்வரும் அரசர்களை ஒழுங்குபடுத்தும்போது சரியான விடை யாது ?
    A – அஜாசத்தன்
    B – மகாபத்மானந்தன்
    C – பிம்பிசாரன்
    D – சந்திரகுப்த மௌரியன்
    E – அசோகன்
    (1) CABDE (2) BCAED (3) BADCE (4) CADBE

11. A – மகா அலெக்சாண்டர் அரசரின் இந்தியப் படையெடுப்பு
    B – சாணக்கிய பிராமணர் அரசரின் பிரதம புரோகிதராகச் செயற்படுதல்
    C – மூன்றாம் பௌத்த சங்கத்தை நடத்தல்
    D – வெளிநாடுகளுக்குத் தர்மதூதுக் குழுக்களை அனுப்புதல்
    E – மகாயான புத்தமதத்தைப் பரப்புதல்
    அசோகப் பேரரசரின் காலத்தில் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகள் இடம்பெறும் விடை இவற்றில் யாது ?
    (1) A, B ஆகியன (2) C, D ஆகியன (3) D, E ஆகியன (4) A, E ஆகியன

12. இலங்கைக்கு வந்த சில வெளிநாட்டுப் படையெடுப்பாளர்கள் நிரல் I இலும் அவர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்றிய அரசர்கள் நிரல் II இலும் உள்ளன. நிரல் I இற்கேற்ப நிரல் II ஐப் பொருத்தமாக்கும்போது சரியான விடை யாது ?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| (i) சேனன் - குத்திகன் | A – தாதுசேனன் |
| (ii) பண்டு, பாரிந்தன் ஆகியோர் உட்பட்ட குழு | B – II ஆம் பராக்கிரமபாகு |
| (iii) I ஆம் ராஜேந்திரன் | C – அசேலன் |
| (iv) கலிங்க மாகன் | D – IV ஆம் மகிந்தன் |
| | E – I ஆம் விஜயபாகு |

(1) CAEB (2) ACBD (3) ACDE (4) CEAB

13. A – அலகாபாத் தூண் பொறிப்பைச் செய்வித்தல்
B – நான்காம் பௌத்த சங்கத்தை நடத்தல்
C – கங்கைச் சமவெளியைக் கீழ்ப்படுத்தல்
D – புத்த சிலைகளைச் செய்யத் தொடங்குதல்
குஷாணப் பேரரசுக் காலத்துக்குரிய வரலாற்று நிகழ்ச்சிகள் இடம்பெறும் விடை யாது ?
(1) A, B ஆகியன (2) B, C ஆகியன (3) B, D ஆகியன (4) A, D ஆகியன

14. இந்திய வரலாற்றின் சில முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகள் நிரல் I இலும் அவற்றுடன் தொடர்புபட்ட அரசர்கள் நிரல் II இலும் உள்ளன. நிரல் I இற்கேற்ப நிரல் II ஐப் பொருத்தமாக்கும்போது சரியான விடை யாது ?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| (i) திருமணத் தொடர்புகளின் மூலம் மகதத்தின் அதிகாரம் விரிவடைதல் | A – கனிஷ்கன் |
| (ii) மகதத்தின் தலைநகரைப் பாடலிபுத்திர நகரத்திற்கு மாற்றுதல் | B – பிம்பிசாரன் |
| (iii) தர்மமகாமாத்திரர்களை நியமித்தல் | C – தர்மாசோகன் |
| (iv) நான்காம் தர்ம சங்கத்திற்கு அனுசரணையளித்தல் | D – அஜாசத்தன் |
| | E – சந்திரகுப்தன் |

(1) BCDA (2) BDCA (3) EBCD (4) DBCA

15. மௌரியப் பேரரசின் அசோகப் பேரரசரின் அரசியல் கொள்கையில் பெரும் புரட்சி ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய முக்கிய சம்பவம் பின்வருவனவற்றில் யாது ?
(1) அசோகப் பேரரசர் புத்தசமயத்தைத் தழுவுதல்
(2) கலிங்கப் போரில் ஏற்பட்ட பெரிய உயிரிழப்பு
(3) மொக்கலீபுத்ததீசத் தேரரின் தலைமையில் மூன்றாவது தர்ம சங்கம் நடைபெறுதல்
(4) அசோகனின் கொள்கைகளைப் பரப்புவதற்குத் தர்மமகாமாத்திரர்களை நியமித்தல்

16. கி.பி. 1017 இல் முதலாம் ராஜேந்திர சோழன் இலங்கைக்குப் படையெடுத்தபோது கைதியாகச் சோழ நாட்டிற்குக் கொண்டு செல்லப்பட்ட அனுராதபுரத்தின் அரசர் பின்வருவோரில் யார் ?
(1) அசேலன் (2) IVஆம் மகிந்தன் (3) V ஆம் மகிந்தன் (4) மித்சென்

17. புனிதத் தந்தம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டபோது இலங்கையில் ஆட்சிசெய்த அரசர் யார் ?
(1) மகாசேனன் (2) கித்சிறிமேவன் (3) வலகம்பா (4) தாதுசேனன்

18. மிகவும் நுண்மையான சரிவுள்ள கால்வாய்களை அமைப்பதற்குப் பண்டைக்கால நுட்பர்கள் திறமையுள்ளவர்களாக இருந்தனர் என்பதை நிரூபிக்க எடுத்துக் காட்டக்கூடிய மிகச் சிறந்த உதாரணம் பின்வருவனவற்றில் யாது ?
(1) அம்பன் கங்கையிலிருந்து பராக்கிரம சமுத்திரத்திற்கு நீரைக் கொண்டு செல்லும் அங்கமெடில்லக் கால்வாய்
(2) கலாவாவியிலிருந்து அனுராதபுர திசாவாவிக்கு நீரைக் கொண்டு செல்லும் யோத எல
(3) அனுராதபுர ரன்மசு உயனவிற்கு நீரைக் கொண்டுசெல்லும் நீர்வழி
(4) குட்டம் பொக்குணவிற்கு நீரைக் கொண்டு செல்வதற்காக அமைக்கப்பட்ட நீர்வழி

19. இந்தியாவிலிருந்து வெளிப் பிரதேசங்களுக்குக் குப்த பேரரசை விரிவுபடுத்திய குப்த ஆட்சியாளராகக் கருதப்படுபவர் பின்வருவோரில் யார் ?
(1) சமுத்திரகுப்தன் (2) II ஆம் சந்திரகுப்தன் (3) குமாரகுப்தன் (4) ஸ்கந்தகுப்தன்

20. டில்லி சுல்தான் பேரரசில் ஆட்சிக்கு வந்த ராஜவம்சங்கள் முறையே இடம்பெறும் விடை யாது ?
(1) கல்ஜி/ அடிமை/ துக்ளக்/ செய்யது/ லோடி (2) அடிமை/ கல்ஜி/ துக்ளக்/ செய்யது/ லோடி
(3) அடிமை/ துக்ளக்/ கல்ஜி/ லோடி/ செய்யது (4) துக்ளக்/ கல்ஜி/ அடிமை/ லோடி/ செய்யது

21. ஒரு முஸ்லிமாக இருந்தபோதிலும் சமயச் சகிப்புத் தன்மையை மக்களுக்கு வழங்கிய ஆட்சியாளர் யார் ?
(1) பாபுர் (2) ஹுமாயுன் (3) மகா அக்பர் (4) ஜகான்கீர்

22. பொலன்னறுவைக் காலத்திற்குரிய ஒரு சிலை படத்தில் காணப்படுகின்றது இச்சிலையில் செல்வாக்குச் செலுத்திய கலைத்துவப் பாரம்பரியம் யாது ?
(1) மௌரிய
(2) குப்த
(3) பல்லவ
(4) சோழ



23. மகாவலிகங்கை பாயும் சமவெளியிலும் சிவனொளிபாதப் பாதை சந்திக்கும் இடத்திலும் இருப்பதும் தலைநகராவதற்கு முன்பாக உப நகராக இருந்ததுமான இலங்கை இராச்சியம் யாது ?
(1) தம்பதெனியா (2) யாப்பகூவா (3) குருநாக்கல் (4) கம்பளை

24. பின்வரும் வரலாற்று நிகழ்ச்சிகளில் எது எமது நாட்டு நாகரிகத்திலும் கலாசாரத்திலும் நெடுங்காலத் தாக்கத்தைக் கொண்டிருந்தது ?
(1) இலங்கையின் கடற்கரைப் பிரதேசங்கள் போர்த்துக்கேய ஆதிக்கத்திற்குக் கீழ்ப்படுதல்
(2) ராஜராஜ சோழன், ராஜேந்திர சோழன் என்ற ஆட்சியாளர்கள் இராசரட்டைப் பிரதேசத்தைக் கீழ்ப்படுத்தல்
(3) மகிந்ததேரர் இந்நாட்டிற்குப் புத்தசமயத்தை அறிமுகஞ்செய்தல்
(4) பிரித்தானியர் முழு நாட்டையும் தமது ஆதிக்கத்திற்குக் கொண்டு வருதல்

25. பின்வரும் பணிகளில் II ஆம் பராக்கிரமபாகு ஆற்றிய பணிகள் இடம்பெறும் விடை யாது ?
A – தம்பதெனிய காலத்தில் ஒழுக்கநெறி நூலைத் தொகுத்தல்
B – பெலிகலைத் தலதா மாளிகையை அமைத்தல்
C – கண்டி அஸ்கிரி சேனாசனயவை ஆரம்பித்தல்
D – கவ்சிலுமிண, விசுத்தி மார்க்க சன்னய ஆகியவற்றை எழுதுதல்
(1) A, D ஆகியன (2) A, C ஆகியன (3) B, D ஆகியன (4) B, C ஆகியன

26. போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்தில் தமது அதிகாரத்தைத் தாபிப்பதற்கு மேற்கொண்ட முயற்சியின்போது கையாண்ட உத்தி பின்வருவனவற்றில் யாது ?
(1) கொனப்பு பண்டாராவை அரசராக்குதல்
(2) தமது கட்டுப்பாட்டின் கீழ் குசுமாசனதேவிக்கு முடிசூட்டுதல்
(3) கண்டி இராச்சியத்தில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புதல்
(4) கண்டி பிக்குகளின் உதவியைப் பெறுதல்

27. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கல்வி மட்டம் உயரிய நிலைமையில் இருப்பதில் மிகவும் செல்வாக்குச் செலுத்திய வரலாற்றுக் காரணி பின்வருவனவற்றில் யாது ?
(1) யாழ்ப்பாணத்தில் கல்விப் பணிகளை மேம்படுத்துவதற்கு அமெரிக்க மிசனரி செய்த பங்களிப்பு
(2) அப்பிரதேசத்தின் அரசியல் தலைவர்கள் கல்வியை மேம்படுத்துவதில் கொண்டிருந்த ஆர்வம்
(3) பெரும்பாலான மிசனரிச் சங்கங்கள் போட்டி உணர்வுடன் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கல்விப் பணிகளை ஒழுங்கமைத்தமை
(4) யாழ்ப்பாணத்தில் பௌதிகப் பிரச்சினைகள் காரணமாகக் கல்வியினூடாகச் சீவனோபாயங்களைக் கண்டறிவதற்கான தேவை

28. மறுமலர்ச்சியின்போது விஞ்ஞானத் துறையில் உள்ள புதிய கண்டுபிடிப்புகள் நிரல் I இலும் அவற்றுடன் தொடர்புபட்டவர்களின் பெயர்கள் நிரல் II இலும் தரப்பட்டுள்ளன. நிரல் I இற்கேற்ப நிரல் II ஐப் பொருத்தமாக்கும்போது சரியான விடை யாது ?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| (i) கோள்கள் சூரியனைச் சுற்றி நீள்வளையத்தில் செல்லல் | A – ஜோஹானஸ் குற்றன்பேர்க் |
| (ii) ஈர்ப்பு விதியைக் கண்டுபிடித்தல் | B – ஜோஹான்னஸ் கெப்ளர் |
| (iii) அச்சிடும் பொறியை உருவாக்கல் | C – கல்லியோ கலிலி |
| (iv) தொலைகாட்டியை உருவாக்கல் | D – வில்லியம் ஹார்வே |
| | E – ஐசாக் நியூற்றன் |

(1) BEAC (2) ACEB (3) AEBC (4) BECA

29. இறுதி இராப்போசனம் (Last Supper) என்ற உலகப் பிரசித்திபெற்ற ஓவியத்தை உருவாக்கியவர் யார் ?
(1) ரபியல்
(2) டான்ரே
(3) லியனாடோ டா வின்சி
(4) பொற்றிசெல்லி

30. 'சூரிய மையக் கொள்கை'யை முதன்முதலாக அறிமுகஞ்செய்தவராகக் கருதப்படும் விஞ்ஞானி யார் ?
(1) கலிலியோ கலிலி
(2) ஜொஹான்னஸ் கெப்ளர்
(3) ஐசாக் நியூற்றன்
(4) நிக்கலேயஸ் கோபர்னிக்கஸ்

31. நாடுகளைக் கண்டுபிடிக்கும் இயக்கத்துடன் தொடர்புபட்ட இனங்களில் மத்திய, தென் அமெரிக்கப் பிரதேசங்களுக்கு வந்து பல்வேறு உத்திகளின் மூலம் அந்நாடுகளின் செல்வத்தைக் கொள்ளையடிப்பதற்கு முக்கியத்துவம் அளித்தோர்
(1) போர்த்துக்கேயர்
(2) ஸ்பானியர்
(3) பிரான்சியர்
(4) ஒல்லாந்தர்

32. பின்வரும் வரலாற்றுச் சம்பவங்களில் எது பிரெஞ்சுப் புரட்சியுடன் தொடர்புபட்டது ?
A – கானாரி இயக்கம் என்னும் அமையத்தை ஆரம்பித்தல்
B – ஸ்ரேற் ஜெனரல் எனப்படும் பாராளுமன்றத்தைக் கூட்டுதல்
C – பொஸ்ரன் தேநீர் விருந்து
D – பஸ்தீல் சிறைச்சாலையைத் தாக்குதல்
(1) C, D ஆகியன
(2) B, C ஆகியன
(3) B, D ஆகியன
(4) A, B ஆகியன

33. இலங்கையின் பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்கள் நாட்டின் நலனிற்காக இன, சமய பேதமின்றிச் செயற்பட்ட விதம் பின்வரும் எவ்வியக்கத்தின் மூலம் நன்றாக எடுத்துக்காட்டப்படுகின்றது ?
(1) மிதநுகர்வு இயக்கம்
(2) தேசிய இயக்கம்
(3) தொழிலாளர் இயக்கம்
(4) தோட்டப் பயிர்ச்செய்கை இயக்கம்

34. பின்வருவனவற்றில் இலங்கையின் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் மாத்திரம் இடம்பெறும் விடை யாது ?
A – பரிஷ் பாடசாலைகளை ஆரம்பித்தல்
B – வீதிகளையும் புகையிரதப் பாதைகளையும் ஆரம்பித்தல்
C – உரோம - ஒல்லாந்தச் சட்டத்தை அறிமுகஞ் செய்தல்
D – சட்டக் கழகத்தை அமைத்தல்
E – இராசகாரிய முறையை இரத்துச் செய்தல்
(1) BDE
(2) CDE
(3) BCE
(4) ACD

35. தொக்குகாவா ஷோகன் காலம் தொடர்பாகச் சரியான கூற்று பின்வருவனவற்றில் யாது ?
(1) யப்பானில் உரோமன் கத்தோலிக்க சமயத்தை ஒழித்தல்
(2) யப்பானின் தலைநகரை ரோக்கியோ நகருக்கு மாற்றுதல்
(3) யப்பானில் மானிய முறையை இரத்துச்செய்தல்
(4) வாக்குரிமையை அறிமுகஞ்செய்தல்

36. மெய்ஜி நிருவாக முறையின் கீழ் யப்பானில் வரையப்பட்ட புதிய அரசியலமைப்பில் பின்வருவனவற்றில் எது **உள்ளடக்கப்படவில்லை** ?
(1) டயற் எனப்படும் இருமன்றப் பாராளுமன்றத்தைத் தாபித்தல்
(2) அடிப்படை உரிமைகள் பற்றிய வாசகங்களை அரசியலமைப்பில் சேர்த்தல்
(3) காணியுரிமையாளர்களாகிய செல்வந்தர்களில் ஏறத்தாழ 1% ஆனோருக்கு வாக்குரிமையை அளித்தல்
(4) நிதி அலுவல்கள் தொடர்பாகப் பாராளுமன்றத்திற்கு மட்டுப்படுத்தப்படாத அதிகாரம் இருத்தல்

37. "சீனாவில் வெற்றிகரமான புரட்சியாளர்கள் விவசாயிகளே." இது எவருடைய கருத்தாகும் ?
(1) சுன் யாத் - சென்
(2) சியாங் கை - ஷெக்
(3) மாவோ சே - துங்
(4) சோ என் - லாய்

38. இலங்கைப் பாராளுமன்றத்தில் இருந்த இரு மன்ற முறைமை எந்த அரசியலமைப்பின் மூலம் இரத்துச் செய்யப்பட்டது ?
(1) கி.பி. 1931
(2) கி.பி. 1948
(3) கி.பி. 1972
(4) கி.பி. 1978

39. ஆட்கொணர்கை எழுத்தாணையை வழங்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் நீதிமன்றம் யாது ?
(1) மேல் நீதிமன்றம்
(2) உயர் நீதிமன்றம்
(3) மேன்முறையீட்டு நீதிமன்றம்
(4) மாவட்ட நீதிமன்றம்

40. பின்வரும் நிகழ்ச்சிகளில் இரண்டாம் உலகப் போருடன் தொடர்புபட்ட சம்பவங்கள் இடம்பெறும் விடை யாது ?
A – அல்சேஸ் - லோறேன் பிரதேசத்தை ஜெர்மனியுடன் இணைத்தல்
B – ஜெர்மனி போலந்தில் படையெடுத்தல்
C – உலகம் நட்பு நாடுகள் அணி, அச்சு நாடுகள் அணி என இரு குழுக்களாகப் பிரிதல்
D – செரஜேவோ சம்பவம்
E – லூசிரானியா என்ற கப்பலை மூழ்கடித்தல்
F – பேர்ள் துறைமுகத்தைத் தாக்குதல்
(1) BCF
(2) BCE
(3) CDE
(4) ACF

2.1.3. எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

## வினாப்பத்திரம் I - புள்ளி வழங்கும் திட்டம்

| வினா இல | விடை | வினா இல | விடை |
|---|---|---|---|
| 01 | 1 | 21 | 3 |
| 02 | 3 | 22 | 4 |
| 03 | 2 | 23 | 4 |
| 04 | 1 | 24 | 3 |
| 05 | 1 | 25 | 1 |
| 06 | 1 | 26 | 2 |
| 07 | 3 | 27 | 1 |
| 08 | 1 | 28 | 1 |
| 09 | 3 | 29 | 3 |
| 10 | 1 | 30 | 4 |
| 11 | 2 | 31 | 2 |
| 12 | 1 | 32 | 3 |
| 13 | 3 | 33 | 2 |
| 14 | 2 | 34 | 1 |
| 15 | 2 | 35 | 1/2 |
| 16 | 3 | 36 | 4 |
| 17 | 2 | 37 | 3 |
| 18 | 2 | 38 | 3 |
| 19 | 2 | 39 | 3 |
| 20 | 2 | 40 | 1 |

ஒரு விடைக்கு 01 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40 புள்ளிகள்

## 2.1.4 வினாப்பத்திரம் 1 இற்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும்

✶ **வரைபு 1 இலிருந்து பெறப்பட்ட தகவல்களிலிருந்து தயாரிக்கப்பட்டது.**

★ 40 வினாக்களைக் கொண்ட இவ்வினாப்பத்திரத்தில் 19 வினாக்களுக்கு 50% த்திலும் குறைவானவர்களே சரியாக விடையளித்துள்ளனர். ஏனைய 21 வினாக்களுக்கு 50% த்திற்கும் அதிகமானோர் சரியான விடையளித்துள்ளனர்.

★ வினா இல. 6,11,21,29 ஆகிய 4 வினாக்களுக்கு மட்டுமே 75% த்திற்கு மேற்பட்டோர் சரியான விடையளித்துள்ளனர்.

★ முழுமையாக நோக்கும்போது வினாப்பத்திரம் 1இற்கு சரியான விடையளித்தவர்கள் வீதம் 30%-60% இற்குமிடையிலேயே அதிகளவில் காணப்படுகிறது.

**00-25%த்தினர் சரியாக விடையளித்த வினாக்கள்**

**அவதானிப்புக்கள்**

★ வினா இல. 3,5,22 ஆகியவற்றுக்கு மேல் தரப்பட்டுள்ள சதவீதமான பரீட்சார்த்திகளே சரியாக விடையளித்துள்ளனர்.

**ஆலோசனைகள்**

★ வரலாற்று மூலாதாரங்களை வகைப்படுத்தி பட்டியற்படுத்த வைப்பதோடு, ஒவ்வொன்றிலிருந்தும் பெறப்படும் தகவல்களை கால ஒழுங்கின்படி ஒழுங்குபடுத்தச் செய்தல்.

★ வரலாற்றுப் புகழ்மிக்க இடங்களுக்கு மாணவரை சுற்றுலா அழைத்துச் செல்லுதல்

★ பொலனறுவைக் கலாசார விருத்தி தொடர்பாக படங்களைச் சேகரித்து அவற்றின் வரலாறுகளைச் சுவைபடக் கதையாக்குதல்.

★ பண்டைய துறைமுகங்கள், வரலாற்றுத்தலங்கள் போன்றவற்றை தேசப்படத்திற் குறித்து, இவை தொடர்பான வரலாறுகளை சிறுகையேடாக்குதல்.

**25-50%த்தினர் சரியாக விடையளித்த வினாக்கள்**

**அவதானிப்புக்கள்**

★ வினா இல. 4,10,12,13,15,19,20,23,25,26,27,30,31,33,36,38,39 ஆகிய 17 வினாக்களுக்கு மேற்குறிப்பிட்ட வீத்தத்திற்கிடைப்பட்டவர்களே சரியான விடையளித்துள்ளனர்.

★ வரலாற்று மூலாதாரம், இந்தியாவில் எழுச்சிபெற்ற பேரரசுகள், தென்மேற்கு இராச்சியங்களின் வரலாறு, கரையோரப் பிரதேசங்களின் போர்த்துக்கேயர் ஆட்சி, கண்டி இராச்சிய தொடர்பு, நாடுகாண் பயனங்கள், இலங்கையின் தேசிய மறுமலர்ச்சி இயக்கம், யப்பானிய வரலாறு, இலங்கையின் அரசியல் யாப்பு விருத்தி ஆகிய பகுதிகளில் மாணவர்களிடம் ஆழமான, தெளிவான வரலாற்று அறிவின்மையை இது வெளிப்படுத்துகின்றது.

**அவதானிப்புக்கள்**

- ★ இந்தியாவில் எழுச்சிபெற்ற பேரரசுகளின் வரலாறு தொடர்பாக வரலாற்று நூல்களிலும் இணையத்தளங்களிலும் அதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளச் செய்தல்.

- ★ இவை தொடர்பான விவரணச் சித்திரங்களும் திரைப்படங்களும் அதிகமாகக் காணப்படுவதால் அவற்றை வகுப்பறைக் கற்றல் சாதனமாகப் பயன்படுத்தல்.

- ★ இவை தொடர்பான சரித்திர நாவல்களை வாசிக்கத் தூண்டுவதன் மூலம் வரலாற்றுப் பாடத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தலாம்.

- ★ விவாத அரங்குகள், வினா-விடைப் போட்டிகள், நாடகங்கள், வழக்காடுமன்றம் போன்ற கற்பித்தல் உத்திகளைக் கையாள்வதன் மூலம் அதிக பெறுபேறுகளை பெற வழிவகுக்கலாம்.

- ★ தேசிய மறுமலர்ச்சி இயக்கம், அரசியல் யாப்பு விருத்தி என்பவற்றை குழுக்களாக மாணவர்களைப் பிரித்து “விமர்சன அரங்கு” களை நடாத்துவதோடு யாப்புகள் தொடர்பாக “சிறுவர் பாராளுமன்ற” அமர்வுகளை நடாத்தலாம்.

- ★ யப்பானிய வரலாறு தொடர்பாக மேலதிக நூல்கள், இணையத்தளத் தகவல்கள், படங்கள் வழங்கப்படுதல் சிறப்பானது.

**51-75%த்தினர் சரியாக விடையளித்த வினாக்கள்**

**அவதானிப்புக்கள்**

- ★ வினா இல. 1,2,6,7,8,9,11,14,16,17,18,24,28,32,34,35,37,40 ஆகிய 18 வினாக்களுக்கு மேற்குறிப்பிட்ட வீதத்தினர் சரியாக விடையளித்துள்ளனர்.

- ★ வரலாறு என்பது என்ன? வரலாற்று மூலங்கள், வரலாற்று பிரசித்திபெற்ற இடங்கள் (பண்டைய தலைநகரங்கள்) ஆரியர்களின் இந்திய, இலங்கை குடிப்பரம்பல், மௌரிய வம்சப் பேரரசு, பௌத்தமதப் பரம்பல், தென்னிந்தியப் படையெடுப்பும் செல்வாக்கும் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி, பிரெஞ்சுப் புரட்சி, இலங்கையின் தேசிய மறுமலர்ச்சி இயக்கங்கள், சீன, யப்பான் வரலாறு இரண்டாம் உலகப்போர் ஆகிய வரலாற்றுப் பகுதிகளைக் கொண்ட இவ்வினாக்களில் மாணவர்களின் துலங்கள் ஓரளவு அதிகரித்துக் காணப்படுகிறது.

- ★ தொடர்ச்சியாக விரிவடைந்து செல்லும் வரலாற்றுப் பாடத்தில் கற்றல் ஈடுபாடு ஏற்பட்டிருப்பது தென்படுகின்றது.

**ஆலோசனைகள்**

- ★ தரம் 6 இலிருந்து 11 வரை இப்பாடப்பகுதிகள் தொடர்பான விடயங்களை ஒரே தலைப்பின் கீழ் தொகுக்கச் செய்தல்

- ★ ஒவ்வொரு வரலாற்று நிகழ்வுகள் தொடர்பாக இலங்கை, ஆசிய, உலக தேசப்படங்களூடாகவும் சித்திரப்படங்களூடாகவும் மாணவர்களை அவ்விடங்களுக்குக் கொண்டு செல்லல்.

- ★ இவற்றிற்கு சாதகமாக இவை தொடர்பான சித்திரப்படங்களை துணையாகக் கொள்ளல்.

**76-100%த்தினர் சரியாக விடையளித்த வினாக்கள்**

**அவதானிப்புக்கள்**

- ★ வினா இல. 21,29 ஆகிய வினாக்களுக்கு இவ்வீதத்தினர் விடையளித்துள்ளனர்.
  மகா அக்பர், லியனாடோ டாவின்சி ஆகியோரின் வரலாறு, நவீன வரலாறாகையாலும் மாணவர்களைக் கவர்ந்த கதைகளாக இருப்பதாலும் உயர்வான துலங்கள் காணப்பட்டுள்ளன.

**ஆலோசனைகள்**

- ★ இவை தொடர்பான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரித்தல், பாத்திரம் ஏற்று நடித்தல், இவர்கள் பற்றிய திரைப்படங்களை தேடிப்பெற்றுக் காண்பித்தல் போன்ற நுட்பங்களைக் கற்பித்தலில் கையாளலாம்.

## 2.2 **வினாப்பத்திரம் II ற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்கள்**

### 2.2.1 **வினாப்பத்திரம் II - கட்டமைப்பு**

வினாப்பத்திரம் **II** நேரம் 03 மணித்தியாலங்கள். மொத்தப் புள்ளிகள் 120

பகுதி **I** I ஆம் II ஆம் III ஆம் என மூன்று பகுதிகள் கொண்டது. I ஆம் பகுதி முதலாம் வினா "அ" பகுதி, "ஆ" பகுதி என இரு பகுதிகளைக் கொண்டது. இவ்வினா கட்டாய வினாவாகும்.

**I ஆம் பகுதி**

(அ) i இலங்கையில் வரலாற்றில் பிரசித்திபெற்ற இடங்கள் 10 ஐ இலங்கைப் படத்தில் குறித்துக் காட்டுதல்

(ஆ) ii உலக வரலாற்றில் பிரசித்திபெற்ற 08 இடங்களை உலகப் படத்தில் குறித்துக் காட்டுதல்

**II ஆம் பகுதி**

(அ) இலங்கை வரலாற்றுடன் தொடர்பான ஐந்து வினாக்களில் மூன்று வினாக்களுக்கு விடை எழுதப்படல் வேண்டும்.

**III ஆம் பகுதி**

இந்தியா, ஐரோப்பா, உட்பட பிராந்திய தேசங்களின் வரலாற்றினை உள்ளடக்கிய நான்கு வினாக்களில் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

II ஆம் III ஆம் பகுதி வினாக்கள் ஒவ்வொன்றும் (i), (ii), (iii), (iv) என்ற பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை முறையே $3 + 4 + 5 + 6$ என்ற புள்ளிகளைப் பெறும். மொத்தமாக ஒரு வினாவுக்கு 18 புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும்.

இறுதிப் புள்ளிகள் :

| | | |
|---|---|---|
| வினாப்பத்திரம் I | - | 80 புள்ளிகள் |
| வினாப்பத்திரம் II | - | 120 புள்ளிகள் |
| (18 + 12) + 18 x 5 | | 200 புள்ளிகள் |
| இறுதிப் புள்ளி | - | 200 ÷ 2 = 100 புள்ளிகள் |

## 2.2.2. வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்

**வினா இலக்கம் 1**

**பகுதி I**

1. (அ) கீழே (i) இன் கீழ்க் காட்டப்பட்டுள்ள **எல்லா** வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (ii) இன் கீழ்த் தரப்பட்டுள்ள **எல்லா** வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள உலகப் படத்திலும் குறித்து, பெயரிடுக.

   (i) பராக்கிரம சமுத்திரம், இரணைமடுக்குளம், மாணிக்க கங்கை, அனுராதபுரம், ஊராதோட்டை, கொடவாயா, காலி, மகியங்கனை, கன்னொருவ, சீதாவக்கை (10 புள்ளிகள்)

   (ii) காவேரி ஆறு, ஈடோ (ரோக்கியோ), செங்கடல், கோவா, மலாய்க் குடாநாடு, தாய்வான் (போர்மோசா), ஹுவாங்ஹோ ஆறு, காபுல் (08 புள்ளிகள்)

(ஆ) (i) கீழே *A, B, C, D* ஆகியவற்றின் கீழ்க் காட்டப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புபட்டவர்களை உமது விடைத்தாளில் முறையே எழுதுக.


*A.* கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவில் இலங்கையின் தேசப்படத்தைத் தயாரித்த கிரேக்கப் புவியியலாளர்.

*B.* கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்து அபயகிரி விகாரையில் இரு ஆண்டுகள் தங்கி இலங்கை பற்றிய தகவல்களையும் உள்ளடக்கி ஒரு நூலை இயற்றிய சீனப் பிக்கு.

*C.* அணிசேரா நாடுகளின் அமையத்தை அமைப்பதற்கு முன்னோடியாகச் செயற்பட்ட இந்தியப் பிரதமர்.

*D.* சுவெஸ் கால்வாயைத் தேசியமயமாக்கிய எகிப்திய சனாதிபதி (04 புள்ளிகள்)

(ii) இங்கு *A, B* ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ள கலை நிர்மாணிப்புகளை நன்றாகப் பரிசீலித்துக் கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை உமது விடைத்தாளில் முறையே எழுதுக.




1. ஓர் உலகப் பாரம்பரியமாகக் கருதப்படும் இந்நிர்மாணிப்பு யாது ?
2. இதனைக் கட்டுவித்த அரசர் யார் ?
3. எவரை நினைவுகூர்வதற்கு இது நிர்மாணிக்கப்பட்டது ?
4. இந்நினைவுச்சின்னத்தை அமைப்பதற்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்பட்ட பாறை வகை யாது ?

(04 புள்ளிகள்)





(iii)
1. இந்நிர்மாணிப்பு யாது ?
2. எக்கட்டடங்களுக்கு முன்னால் இத்தகைய நிர்மாணிப்பு களைப் பார்க்கலாம் ?
3. இங்கு காட்டப்படும் நாற்பாதமுள்ள விலங்குகளில் ஒன்றைக் குறிப்பிடுக.
4. இங்கு மையப் பகுதியில் காட்டப்படும் பூ யாது ?

(04 புள்ளிகள்)

2.2.3 **எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**


**வினா 1**

(1) (அ) (i)




(10 புள்ளிகள்)

(1) (அ) (ii)




(08 புள்ளிகள்)

(ஆ) (i) A - தொலமி

B - பாகியன்

C - ஜவகர்லால் நேரு

D - அப்துல் கமால் நஸார் / நஸார் **(1 x 4 = 04 புள்ளிகள்)**

(ii) 1. தாஜ்மஹால்

2. ஷாஜஹான்

3. மும்தாஜ் / சாஜஹானின் மனைவி / சாஜஹானின் காதலி

4. பளிங்கு / மாபிள் **(1 x 4 = 04 புள்ளிகள்)**

(iii) 1. சந்திரவட்டக் கல்

2. சமய, அரச கட்டிடங்கள்

3. குதிரை, யானை, சிங்கம், எருது, ஆராமை, விகாரை, பௌத்த விகாரை

4. தாமரை **(1 x 4 = 04 புள்ளிகள்)**

## விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும்

வினாப்பத்திரம் II ல் முதலாவது வினா கட்டாய வினாவாக அமைந்திருந்தது. 99% மாணோர் விடையளித்துள்ளனர்.

- இவ்வினாவிற்குரிய மொத்தத்தில் 30 ஆகும். 23% மான மாணவர்கள் 00-07 க்கு இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 51% த்தினர் 8-15 க்கு இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 21%த்தினர் 16-22க்கும் இடையிலான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 5%த்தினர் 23-30 க்கும் இடையிலான புள்ளிகளைப் பெற்றுள்ளனர் (வரைபடம் 3).

- முதலாவது வினாவின் பிரிவு "அ" இலங்கைப் படத்திலும் உலகப் படத்திலும் வரலாற்று இடங்களைக் குறிக்கும் கட்டாய வினாவாகும். இவ்விரு படத்திலும் சரியாக குறித்த மாணவர்களின் வீதம் மிகக்குறைவாக உள்ளது. பிரிவு "அ" (i) இல், இலங்கைப் படத்தில் வரலாற்று இடங்களை சரியாகக் குறித்தோர் 28% த்தினர் ஆவர். பிரிவு "ஆ" (ii) இல், உலகப் படத்தில் வரலாற்று இடங்களை சரியாகக் குறித்தோர் 18% த்தினர் ஆவர். இதிலிருந்து மாணவர்கள் தரைத்தோற்ற அம்சங்களை சரியாக இனங்கண்டு, பிழையின்றி வரலாற்று இடங்களைக் குறிக்கும் பயிற்சி மிகக்குறைவாக பெற்றுள்ளனர் என்பது தெளிவாகின்றது.

- முதலாவது வினாவின் பிரிவு "ஆ" (i) இல் A, B, C, D ஆகிய வினாக்களுள் A வினாவுக்கு 68% த்தினர் சரியாக விடையளித்ததினால் அதிகூடிய வீதம் பெறப்பட்டுள்ளது. B வினாவுக்கு 39% த்தினரும் C வினாவுக்கு 42% த்தினரும் சரியாக விடையளித்துள்ளனர். D வினாவுக்கு 25% த்தினர் சரியாக விடையளித்திருப்பது இவ்வினாக்களில் மிகக்குறைந்த வீதத்தினைக் காட்டுகின்றது.

- முதலாவது வினாவின் பிரிவு "ஆ" (ii) இல் 1,2,3,4 ஆகிய உப வினாக்களுள் 1ஆம் வினாவுக்கு 89% த்தினர் சரியாக விடையளித்ததினால் அதிகூடிய வீதம் பெறப்பட்டுள்ளது. 2ஆம் வினாவுக்கு 76% த்தினரும் 3ஆம் வினாவுக்கு 69% த்தினரும் 4ஆம் வினாவுக்கு 51% த்தினரும் சரியாக விடையளித்துள்ளனர். முதலாவது வினாவின் பிரிவு "ஆ" (iii) இல் 1,3 ஆம் உப வினாக்களுக்கு 94% த்தினரும், 2 ஆம் உப வினாவுக்கு 68% த்தினரும், 4ஆம் உப வினாவுக்கு 793% த்தினரும் சரியாக விடையளித்துள்ளனர்.

- வரலாற்று இடங்களைக் குறிப்பதற்கு பயிற்சியளிக்கும்போது அவற்றின் வரலாற்று ரீதியான மறுபெயர்களைக் குறிப்பிட்டு பழக்குதல் அவசியமானதாகும்.

- அத்தோடு அது தொடர்பான வரலாற்றுச் சம்பவங்களை விளக்குவதன் மூலமும் அதிகூடிய விளக்கத்தைப் பெறுவதோடு ஞாபகத்த்தில் வைத்துக்கொள்ளவும் முடியும்.

**வினா 2**

**நோக்கம்:** நீர்வள நாகரீகத்தின் நிர்வாக முறையையும் நீர்ப்பாசன விருத்தி தொடர்பான அறிவையும் திறனையும் வெளிப்படுத்துதல் தொடர்பானதாகும்.

**பகுதி II**

2. "இந்நாட்டில் நிலவிய நீர்வள நாகரிகத்தில் நிருவாகக் கோலமும் நீர்பாசனத் தொழினுட்பவியலும் மிகவும் உயர்ந்த மட்டத்தில் இருந்தன."

(i) *நீர்வள நாகரிகம் நிலவிய அனுராதபுர, பொலன்னறுவைக் காலங்களில் இருந்த, A, B, C எனக் கீழே குறிக்கப்பட்டுள்ள ஒவ்வொருவரினதும் உத்தியோகபூர்வப் பதவியைக் காட்டுக.*

*A.* *கிராமத்தின் நிர்வாகி*
*B.* *ருகுண நாட்டின் ஆட்சியாளர்*
*C.* *மாயா ரட்டையின் ஆட்சியாளர்* (03 புள்ளிகள்)

(ii) *கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் ஒவ்வொன்றுக்கும் அமைக்கப்பட்ட தொழினுட்பவியல் படைப்புகளைக் கீழே தரப்பட்டுள்ள பட்டியலிலிருந்து தெரிந்தெடுத்து முறையே எழுதுக.*

*A.* *குளத்தின் மிகையான நீரை வெளியேற்றல்*
*B.* *பிரதான குளத்தின் அந்தத்தில் உள்ள சிறிய அருவிகளின் மூலம் குளத்தில் சேர்க்கப்படும் வண்டலைக் கட்டுப்படுத்தல்*
*C.* *கால்வாயினூடாக நீரைக் கொண்டு செல்வதற்கு ஆற்றுக்குக் குறுக்கே கற் குற்றிகளை இட்டு அமைக்கப்படும் தடுப்பு*
*D.* *குளத்தில் உள்ள நீரின் அமுக்கத்தைச் சமப்படுத்தி மடையினூடாகப் பிரதான கால்வாய்க்கு நீரை விடுவித்தல்*

***(நீர்வழங்கும் குளம்/ கட்டுப்படுத்தல்/ அலைதாங்கி/ சிறியகுளம்/ அணைக்கட்டு/ உயர்கலிங்கல்/ கலிங்கல் தொட்டி/ கலிங்கல் அணை/ சுருங்கை)*** (04 புள்ளிகள்)

(iii) *நீர்வள நாகரிகம் நிலவிய காலத்தில் அதன் மத்திய ஆட்சியாளராகிய அரசரிடமிருந்து மக்கள் எதிர்பார்த்த சேவையை* **இரு** *விடயங்களை அடிப்படையாய்க் கொண்டு விளக்குக.* (05 புள்ளிகள்)

(iv) *எமது பண்டைய நீர்ப்பாசனத் தொழினுட்பவியலாளர்கள் நீர்ப்பாசன நிர்மாணிப்புகளுக்காக நாட்டின் பௌதிக இயல்புகளைப் பயன்படுத்திய விதத்தை உதாரணங்கள் தந்து எடுத்துக்காட்டுக.* (06 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**
**வினா 2**

(ஆ) (i)
A - கமிக / பருமக / கிராம போஷக/ காமினி/ கம்பலத்தா/ கிராமணி/ கம்போஷக
B - ஆபா / ரோஹனபோஷக/ ஏபா / ஆதிபாத
C - மாபா / மகாதிபாத **(1 x 3 = 03 புள்ளிகள்)**

(ii)
A - சுருங்கை
B - சிறிய குளம்
C - அணைக்கட்டு
D - கலிங்கல் தொட்டி **(1 x 4 = 04 புள்ளிகள்)**

(iii) மக்களைப் பாதுகாத்தல் :- உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் எழும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தலும், நாட்டின் அமைதியைப் பேணலும்.

- விவசாய நடவடிக்கைகளுக்காக நீர்ப்பாசன வசதிகளை வழங்கல் :
  குளக்கட்டுக்களை அமைத்தல் / கால்வாய்களை அமைத்தல் ஊடாக விவசாயிகளுக்கு நீர் வழங்கல்
- சமய / கலாசார நடவடிக்கைகளை மேம்பாடடையச் செய்தல்:
  புத்தமதத்தைப் பாதுகாத்தல், விகாரைகள் அமைத்தலூடாக மக்களுக்கு உதவுதல், பல்வேறு கலையாற்றல் உடையவர்களின் ஆக்கங்களுக்கான ஊக்குவிப்பைத் தருதலும், வெகுமதி வழங்கலும்.
- அரச செயற்பாடுகளின் போது பௌத்த துறவிகளினதும், புரோகிதர்கள் / மந்திரிகள் / சேனாதிபதிகளின் ஆலோசனைகளைப் பெற்று, அரச தர்மங்களுக்கு ஏற்றவாறு நாட்டை நிர்வகித்தல்
- நீதித்துறையின் தலைவராகச் செயற்படுதல்.

- இரண்டு காரணத்துக்கு - 02 புள்ளிகள்
- விளக்கத்துக்கு - 03 புள்ளிகள்

மொத்தப் புள்ளி - 06 புள்ளிகள்

(iv) ● பழைய நீர்ப்பாசனமுறையில் பௌதீக இயல்புகளைப் பயன்படுத்திய விதம்

**குள நிர்மாணம்:**

- உலர் வலயத்தில் நிலத்தின் அமைப்பினைப் பயன்படுத்தி குளங்களை அமைத்தல்
- சுவடுகளை இணைத்து நீரை மறித்து கட்டப்படும் அணையின் ஊடாகக் குளங்களை உருவாக்கலும் அங்கிருந்து கால்வாய்கள் ஊடாக நீர்ப்பாசனம் செய்தலும்.
- குளத்தின் அணைக்கட்டை அமைக்கும்போது நிலத்தின் அமைப்பை கவனத்திலெடுத்துப் போதிய உபாயத்துடன் அமைத்தல்.
- குளக்கட்டுக்களை அமைக்கும்போது பொருத்தமான மண், கல் என்பவற்றைத் தெரிவு செய்தல். உதாரணம் : மின்னேரியா
  - சுருங்கை வழியாக நீரை வெளியேற்றல். பொருத்தமான இடங்களை அடையாளப்படுத்தியதுடன் ஆழமான குளத்தின் பகுதிகளிலிருந்து அவற்றை அமைத்தல்
  - சமவுயரக் கோட்டு அடிப்படையில் குளங்கள் அமைக்கப்பட்டன.
  - மலைகள் இல்லாத பிரதேசத்தில் குளங்களை அமைத்தல். உ-ம் : மன்னார் மாவட்ட யோத வாவி, வட்டமாக 7 மைல் நீளமான அமைப்பில் கட்டப்பட்டுள்ளது.
  - சொரபர வாவியின் கலிங்கல் வெட்டியெடுக்கப்பட்ட கருங்கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

**கால்வாய்கள் நிர்மாணித்தல் :**

- உலர் வலயத்தில் கால்வாய்களை அமைக்கும் போது நிலத்தின் அமைப்பு (சாய்வு) கவனத்தில் கொள்ளப்பட்டது.
- நீண்ட தூரத்துக்கு நீரைக்கொண்டு செல்லும்போது மென்சாய்வின் அடிப்படையில் கொண்டு செல்லப்பட்டமை. உ-ம் : கலாவாவியிலிருந்து திசாவாவிக்கு நீரை எடுத்துச் சென்றபோது அக்கால்வாய் ஒவ்வொரு கிலோ மீற்றருக்கும் 95mm வீதம் சாய்ந்து சென்றுள்ளதை அவதானிக்கலாம்.

**அணைக்கட்டுக்கள் அமைத்தல்.**

- ஆறு ஓடும்போது ஆற்றின் வேகம் குறைந்த பிரதேசத்தில் அணைக்கட்டுக்களை அமைத்தல். இதற்கு உதாரணமாக அம்பன் கங்கையில் அங்கமடிலே அணையைக்கட்டி பராக்கிரமசமுத்திர நிர்மாணம். இதனைப் போலவே மகாவலி கங்கையில் மினிப்பே அணைக்கட்டு ஊடாக நீரைப் பெற்றுக்கொள்ளல்.
- சிறிய குளங்களை நிலமுறைமையை அடிப்படையாகக்கொண்டு கொத்தணி முறைமையில் நீர்ப்பாசனக் குளங்கள் அமைக்கப்பட்டமை. மல்வத்து ஓயா வளவகங்கைப் பிரதேச குளங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

| | |
|---|---|
| 3 உதாரணத்துக்கு | - 03 புள்ளிகள் |
| விளக்கத்துக்கு | - 03 புள்ளிகள் |
| மொத்தம் | - 06 புள்ளிகள் |

## விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும்

இவ்வினாவினை 93%மான மாணவர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். இலங்கையின் நீர்வள நாகரீக முறைமை மற்றும் நீர்ப்பாசனத் தொழில் விருத்தி தொடர்பான அறிவு மற்றும் விளக்கத்தைப் பரீட்சித்தலே இதன் நோக்கமாகும்.

இவ்வினாவுக்கு மொத்த புள்ளி 18 ஆகும். இவற்றுள் 0-4 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 35% மாகவும் 5-9 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 38% மாகவும் 10-13 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 17% மாகவும் 14-18 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 9% மாகவும் காணப்படுகின்றனர்.(வரைபடம் 3) இவ்வினாவின் (i) A வினாவிற்கு 70%த்தினரும் B வினாவிற்கு 21%த்தினரும் C வினவிற்கு 22%த்தினரும் சரியாக விடையளித்துள்ளனர். (ii) A வினாவிற்கு 71%த்தினரும் B,C ஆகிய இரு வினாக்களுக்கும் 38% த்தினரும் D வினாவிற்கு 55% த்தினரும் சரியாக விடையளித்துள்ளனர்.

தொடர்ச்சி மறுபக்கத்தில்...

முன்பக்கத் தொடர்ச்சி....

(iii) ஆம் வினாவிற்கு 48% த்தினர் சரியான விடையளித்துள்ள அதேவேளை (iv) ஆம் வினாவிற்கு 29% த்தினர் விடையளித்துள்ளனர். இப்பகுதிகள் இரண்டிற்கும் மாணவர்கள் புள்ளிகளைப் பெற்ற போதிலும் சரியான விடையளிப்பதில் பின்னடைவைக் கண்டுள்ளனர்.

- தரம் 6 இலிருந்து 11 வரை நீர்வள நாகரீகம், நீர்ப்பாசனத் தொழிநுட்பம், நிர்வாக முறைமைகள் தொடர்பான வரலாற்றுத் தகவல்களை அட்டவணைப்படுத்தினால் சிறப்பான விளக்கத்தை மாணவரகளுக்கு வழங்கலாம்.
- உதாரணங்களை படங்களின் உதவியுடன் விளக்கமளித்தல்
- நேரடியாக யாதேனும் ஒரு நீர்ப்பாசனத் திட்டத்திற்கு மாணவர்களை (சுற்றுலா) அழைத்துச் சென்று விளக்கமளித்தல்.

## வினா 03

**நோக்கம்:** இலங்கை வரலாற்றில் அனுராதபுரக் காலத்தில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார கலாசார மாற்றங்கள் தொடர்பான தெளிவான விளக்கத்தைப் பெறுதல் தொடர்பானதாகும்.

3. *"அனுராதபுர இராச்சியக் காலம் இலங்கை வரலாற்றில் முனைப்பான அரசியல், பொருளாதார, கலாசார மாற்றங்கள் பல ஏற்பட்ட காலமாகும்."*

(i) *கீழே தரப்பட்டுள்ள பட்டியலிலிருந்து அனுராதபுரத்தை இராச்சியமாகக் கொண்ட* **மூன்று** *அரசர்களைத் தெரிவு செய்து எழுதுக.*

**(காவன்தீசன்/தாதுசேனன்/ II ஆம் கஜபாகு / I ஆம் அக்போ/நிசங்கமல்லன்/ V ஆம் மிகிந்து)** (03 புள்ளிகள்)

(ii) *A. புலகத்தன் உட்பட ஏமு தென்னிந்தியப் படையெழுப்பாளர்கள் இலங்கைக்கு வந்தபோது அனுராதபுர இராச்சியத்தை ஆட்சிசெய்தல்*

*B. முதன்முதலாக லம்பகர்ண வமிசத்திற்கு ஆட்சியதிகாரத்தைப் பெறுதல்*

*C. இலங்கையின் மிகப் பெரிய தூபியாகிய ஜேத்தவன தாதுகோபத்தை அமைத்தல்*

*D. கந்தளாய்க் குளத்தையும் கிரித்தலைக் குளத்தையும் அமைத்தல்*

*மேலே A, B, C, D ஆகியவற்றினால் காட்டப்படும் பணிகள் ஒவ்வொன்றுடனும் தொடர்புபட்ட அரசரை முறையே குறிப்பிடுக.* (04 புள்ளிகள்)

(iii) *"வலகம்பா அரசரின் ஆட்சிக்காலம் சமயரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பல நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலமாகும்."* **இரு** *உதாரணங்கள் தந்து இதனை விளக்குக.* (05 புள்ளிகள்)

(iv) *"மகாசேன மன்னன் நீர்வள நாகரிகத்தில் நீர்ப்பாசனத் தொழிலின் மேம்பாட்டிற்கு முக்கிய சேவையை ஆற்றிய ஆட்சியாளராவார்." அவர் கட்டுவித்த* **இரு** *குளங்களையும் ஒரு கால்வாயையும் குறிப்பிட்டு, நீர்ப்பாசனத் தொழிலின் மேம்பாட்டிற்கு ஆற்றிய சேவையை விவரிக்க.* (06 புள்ளிகள்)

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

(i) தாது சேனன்
I ஆம் அக்போ
V ஆம் மிகிந்து **(1 x 3 = 03 புள்ளிகள்)**

(ii) A - வலகம்பாகு / வட்டகாமினி
B - வசபன்
C - மகாசேனன்
D - II ஆம் அக்போ **(1 x 4 = 04 புள்ளிகள்)**

(iii) வலகம்பாகு மன்னனின் சமயப்பணிகளின் முக்கியத்துவம் :

- அபயகிரி விகாரையை நிர்மாணித்தல். (எதிரிகளிடமிருந்து தப்பிச் செல்லும்போது அவனுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்ட இடத்தில் இவ்விகாரை அமைக்கப்பட்டது. )
- இலங்கையில் முதன்முறையாக தனிப்பட்ட ஆராமைகளில் பூஜைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் குப்பிக்கல திஸ்ஸ தேரர் வழிபாடு செய்வதற்காக அபயகிரி விகாரையை நிர்மாணித்தார்.
- இவரின் காலத்தில் நிக்காயப் பிரிவுகள் ஏற்பட்டன. (மகாவிகாரையில் இருந்து வெளியேறிய 500 பிக்குமாருடன் குப்பிக்கலதிஸ்ஸவின் மாணவரான பாலமகுதிஸ்ஸ அபயகிரி நிக்காய உருவாக்கியதுடன் நிக்காயப் பிரிவுகள் தோற்றம் பெற்றன.)
- திரிபிடகத்தை முறைபடத் தொகுப்பித்தார். இதுவரை கர்ண பரம்பரைக் கதைகளாகப் பேணப்பட்டவை திரிபிடகத்துடன் நூலுரு பெற்றது.
- லென் (குகை) விகாரையை அமைத்தல். தான் பதவிக்கு வந்தபின் தனக்கு அபயமளித்த இடங்களில் குகை விகாரைகளை அமைத்தான். உதாரணம்: தம்புள்ளயில் அமைக்கப்பட்ட குகை விகாரை

| | |
|---|---|
| - இரண்டு காரணத்துக்கு | - 02 புள்ளிகள் |
| - விளக்கத்துக்கு | - 03 புள்ளிகள் |
| மொத்தப் புள்ளி | - 06 புள்ளிகள் |

(iv) மகாசேன மன்னனின் நீர்ப்பாசனப் பணிகள் :

- 16 குளங்களைக் கட்டினான். - மின்னேரியா, குருளு, கவ்டுலு, மகாகந்தராவ, மகாகல்கடவல, ஆகிய குளங்களைக் கட்டுவித்தல்
- எலகரக் கால்வாயை விசாலித்தல் - மின்னேரியா, மகாகல்கடவலக் குளங்களை எலகரக் கால்வாயால் இணைத்தல்.
- பப்பதந்த கால்வாயை அமைத்தல்.
- மின்னேரியக் குளத்தைக் கட்டுவித்த காரணத்தால் மகாசேனன் “மின்னேரியாத் தெய்வம்” என அழைக்கப்பட்டான்.

| | |
|---|---|
| இரண்டு குளங்கள், 1 கால்வாய் | - 03 புள்ளிகள் |
| மேலதிக விளக்கம் | - 03 புள்ளிகள் |
| மொத்தம் | - 06 புள்ளிகள் |

## விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்

அனுராதபுர இராசதானிக் காலத்தில் இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார கலாசாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பான விளக்கத்தைப் பரீட்சிப்பதே இதன் நோக்கமாகும்.

இவ்வினாவினை 83% மான மாணவர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். (வரைபு 2) இவ்வினாவிற்கு மொத்தப் புள்ளி 18 ஆகும். இவற்றுள் 0-4 வரையான புள்ளிகள் பெற்ற மாணவர்கள் 35% மாகவும் 5-9 வரையான புள்ளிகள் பெற்றோர் 33% மாகவும் 10-13 வரையான புள்ளிகள் பெற்றோர் 19% மாகவும், 14-18 வரையான புள்ளிகள் பெற்றோர் 12% மாகவும் காணப்படுகின்றனர். (வரைபு 3)

தொடர்ச்சி மறுபக்கத்தில் ......

முன்பக்கத் தொடர்ச்சி ...

இவ்வினாவின் (i) வினாவிற்கு 58%த்தினர் சரியாக விடையளித்துள்ளனர். (ii) A வினாவிற்கு 30%த்தினரும் B வினாவிற்கு 35%தினரும் C வினாவிற்கு 32%த்தினரும் D வினாவிற்கு 29%த்தினரும் சரியாக விடையளித்துள்ளனர்.

(iii) ஆம் வினாவிற்கு 45% த்தினரும் (iv) ஆம் வினாவிற்கு 38% த்தினரும் சரியாக விடையளித்துள்ளனர். விளக்கமளிக்கும் வினாக்களுக்கு சரியாக விடையளிக்காமையால் இதன் அடைவு வீதம் குறைந்துள்ளது.

மொத்தத்தில் (ii)ஆம் வினாவிற்கு அடைவு வீதம் வீழ்ச்சியடைந்தமைக்கு காரணம் அனுராதபுர காலத்து மன்னர்களைப் பற்றி விரிவான அறிவின்மையேயாகும்.

- இம்மன்னர்களது வரலாறுகளடங்கிய கதைப்புத்தகங்களைத் தேடிப் பெற்று வாசிக்கத் தூண்டுதல்
- இவர்கள் தொடர்பான நாடகங்கள் அரங்கேற்றப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு அழைத்துச் செல்லல். அல்லது நடிக்கச் செய்தல் (மேடை நாடகம், தொலைக்காட்சி நாடகம்)
- இவர்கள் தொடர்பான விவரணச் சித்திரங்கள் தயாரிக்க வைத்தல்
- நீர்ப்பாசனத் திட்டங்களை நேரடியாகப் பார்வையிட அழைத்துச் செல்லல்.

**வினா 04**

**நோக்கம்:** நான்காம் வினா பொலன்னறுவையின் வீழ்ச்சியின் பின்னர் இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களை புலப்படுத்துவது தொடர்பானதாகும்.

**4.** *''பொலன்னறுவை இராச்சியம் வீழ்ச்சியடைந்த பின்னர் பண்டைய இலங்கையின் இராச்சியங்களின் தலைநகர்கள் அவ்வப்போது இடம் மாறியமை அரசியல் கோலத்தினைப் போல் பொருளாதாரக் கோலத்திலும் ஏற்பட்ட மாற்றங்களில் பெரும்பாலும் செல்வாக்குச் செலுத்திய நிகழ்ச்சியாக அமைந்தது.''*

(i) *A.* I ஆம் புவனேகபாகு
*B.* II ஆம் புவனேகபாகு
*C.* IV ஆம் புவனேகபாகு
மேற்குறித்த அரசர்கள் ஆட்சிசெய்த இராச்சியங்களை அடைப்புக்குறிகளினுள்ளே தரப்பட்டுள்ள பெயர்களிலிருந்து தெரிந்தெடுத்து *A, B, C* என்னும் அதே ஒழுங்கில் எழுதுக.
**(யாப்பகூவா, தம்பதெனியா, குருநாகல், கம்பளை, கோட்டை)** (03 புள்ளிகள்)

(ii) *A.* கோட்டை அரணை அமைத்தவர்
*B.* கி.பி. 1411 இல் ரைகமவை ஆட்சிசெய்த வீரர் அழகேஸ்வரரைத் தோல்வியடையச் செய்து, அவரைக் கைதியாகச் சீனாவிற்குக் கொண்டுசென்ற சீனத் தளபதி
*C.* சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே சமாதானத் தொடர்புகளைப் பேணியமையால் மக்களிடையே பிரசித்திபெற்றிருந்த யாழ்ப்பாணத்தின் ஆட்சியாளர்
*D.* யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பான தகவல்கள் பெறப்படத்தக்க முக்கிய மூல நூல்
மேற்குறித்த *A, B, C* ஆகியவற்றுடன் தொடர்புபட்ட ஒவ்வொருவரையும் *D* யில் குறிப்பிட்ட நூலின் பெயரையும் முறையே குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) கோட்டையை ஆட்சிசெய்த அரசர்களில் VI ஆம் பராக்கிரமபாகு மன்னர் ஏன் முக்கியத்துவம் வாய்ந்தவராக விளங்கினார் என்பதை **இரு** விடயங்களைக் கொண்டு விவரிக்க. (05 புள்ளிகள்)

(iv) ராஜரட்டையிலிருந்து தென்மேற்கிற்குத் தலைநகர்கள் இடம் மாறியதோடு பொருளாதாரக் கோலமும் மாறிய விதத்தை **மூன்று** விடயங்களைக் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

(ஆ) (i) A - யாப்பகூவ
B - குருநாகல்
C - கம்பளை **(1 x 3 = 03 புள்ளிகள்)**

(ii) A - நிசங்க அழகக்கோனார் நிசங்க அழகேஸ்வரர்
B - செங்கோ
C - வரோதயன்
D - யாழ்ப்பாண வைபவமாலை **(1 x 4 = 04 புள்ளிகள்)**

(iii) கோட்டை மன்னன் 6ஆம் பராக்கிரமபாகுவின் முக்கியத்துவத்துக்கான காரணங்கள்.

- இலங்கையின் முழுப் பிரதேசத்தையும் ஒன்றுபடுத்தி உறுதியாக ஆட்சி செய்தல்
- யாழ்ப்பாணப் பிரதேசத்தையும், வன்னிப் பிரதேசத்தையும், மலையகத்தில் உருவான உள்நாட்டுக் கலவரத்தையும் அடக்கி நாட்டில் அமைதியான ஆட்சியை உருவாக்குதல்.
- நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல்.
- வெளிநாடுகளில் தனது அதிகாரத்தை நிலைநாட்டும் வகையில் வியாபார உறுதிப்பாட்டுக்காக தென்னிந்திய அதிவீரராமப் பட்டணத்தைக் கைப்பற்றுதல்.
- விஜய நகர இராச்சியத்தின் துறைமுகத்தைக் கைப்பற்றல்.
- இலக்கியப் பங்களிப்புக்கள். இலக்கியப் பொற்காலமாகக் காணப்படுகிறது.
    - பிரிவேனாக் கல்வியை மேம்படுத்தல்
    - மனைவியான சுனேத்திரா தேவியின் பெயரில் சுனேத்திராதேவி பிரிவேனாவை ஏற்படுத்துதல்.
    - “றுவன்மல்” எனப்படும் நிகண்டு நூலை உருவாக்கினான்.

| | |
|---|---|
| - மூன்று காரணத்துக்கு | - 03 புள்ளிகள் |
| - விளக்கத்துக்கு | - 03 புள்ளிகள் |
| மொத்தப் புள்ளி | - 06 புள்ளிகள் |

(iv) தென்மேற்குப் புலம் பெயர்வால் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள் :

- ராஜரட்டை ராஜதானியின் வீழ்ச்சியின் பின் மக்கள் புதிய பௌதீக, புவியியல் அம்சங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி இருந்தது.
- பாதுகாப்பான பிரதேசங்களுக்குப் புலம்பெயர்ந்தமையால் விவசாய நடவடிக்கைகளுக்கு அரசர்கள் ஆர்வம் காட்டாமை, ஈரவலயப் பிரதேசமாகையால் நீர்ப்பாசனத்துக்கான தேவைகள் அதிக அளவில் காணப்படாமை.
- நெல் பிரதான பயிர்ச்செய்கையாகக் காணப்பட்டது. நீர்ப்பற்றாக்குறையான பிரதேசத்தில் சேனைப் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டது.
- உலர்வலயப் பிரதேசத்தில் தென்னை, பாக்கு, மிளகு, வெற்றிலை ஆகியவை பயிரிடப்பட்டன.
- ஈரவலயக் கரையோரப் பிரதேசங்களில் தென்னைப் பயிர்ச்செய்கை முக்கியமாகக் காணப்பட்டது.
- ஈரவலயத்தில் காடாகக் காணப்பட்ட கறுவா வர்த்தகப் பயிராக மாற்றப்படுதல்.
- வியாபாரம் முக்கியம் பெறுதல் - கறுவா / பாக்கு / மிளகு / சாதிக்காய் / ஏலக்காய் / முத்து / மாணிக்கம் / யானைத்தந்தம் என்பவை ஏற்றுமதி செய்யப்படல்.
- விவசாய அடிப்படை தன்னிறைவுப் பொருளாதாரம் வியாபாரப் பொருளாதாரமாக மாற்றமுறுவதை அவதானிக்கலாம்.
- இந்தியா, அரேபியா, சீனா, பர்மா, எகிப்து ஆகிய நாடுகளுடன் வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பமாதல்.
- வெளிநாட்டு வர்த்தகம் அரசினால் ஒழுங்கமைக்கப்படுதல்.
- உள்நாட்டு வர்த்தகம் விரிவடைந்தமை ஓலைச் சுவடிகள் மூலம் அறிய முடிகிறது. (குருநாகல் விஸ்தரய)
- பணப்பரிமாற்றம் விரிவடைகின்றமை.

| | |
|---|---|
| - மூன்று காரணத்துக்கு | - 03 புள்ளிகள் |
| - விளக்கத்துக்கு | - 03 புள்ளிகள் |
| மொத்தப் புள்ளி | - 06 புள்ளிகள் |

## விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்

பொலன்னறுவை வீழ்ச்சியடைந்ததன் பின் தோற்றம்பெற்ற இரசதானிகளில் அரசியல், பொருளாதார முறைமைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பான அறிவைப் பரீட்சித்தலே இவ்வினாவின் நோக்கமாகும். இவ்வினாவினை 49%மான மாணவர்களே தேர்ந்தெடுத்துள்ளனர். இவ்வினாவை தேர்ந்தெடுத்தோர் தொகை ஒப்பீட்டளவில் குறைவான தொகையினராகும்.

இவ்வினாவுக்கு மொத்தப் புள்ளி 18 ஆகும். இவற்றுள் 0-4 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 63% மாகவும் 5-9 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 18% மாகவும் 10-13 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 11% மாகவும், 14-18 வரையான புள்ளிகள் பெறறவர்கள் 9% மாகவும் காணப்படுகின்றனர். (வரைபு 3)

இவ்வினாவின் (i) A, B, C ஆகிய வினாக்களுக்கு 38%க்கும் 42%க்கும் இடையிலான மாணவர்கள் சரியாக விடையளித்துள்ளனர்.

இவ்வினாவின் (i) A, B, C ,D ஆகிய வினாக்களுக்கு சரியான விடையளித்தோர் வீதம் வீழ்ச்சி கண்டுள்ளது. பிரிவு (ii) A, B பிரிவுகளுக்கு 22% க்கும் 25%க்கும் இடையிலான மாணவர்கள் சரியாக விடையளித்துள்ளனதுடன் C வினாவுக்கு 11% உம் பிரிவு D க்கு 25% த்தினரும் விடையளித்துள்ளனர்.

(iii) ஆம் (iv) ஆம் வினாக்களுக்கு விரிவான விடை எதிர்பார்க்கப்பட்ட போதும் சரியான விடையளித்தோரின் வீதம் குறைவாகவே காணப்படுகிறது. (iii) ஆம் வினாவிற்கு 30%த்தினரும் (iv) வினாவிற்கு 28%த்தினரும் சரியாக விடையளித்துள்ளனர்.

இதன் (ii), (iii), (iv) ஆம் பிரிவிற்கு குறைந்த வீதத்தினர் மட்டுமே சரியான விடையளிப்பதற்கு காரணம் பண்டைய மன்னர்களைப் பற்றியும் அவர்களுடைய பணிகளைப் பற்றியும் இராசதானிகளின் அரசியல் பொருளாதார நிலைமைகள் பற்றியும் ஆழமான விளக்கமின்மையே எனலாம்.

- மாணவர்களைக் குழுக்களாக்கி அவர்களுக்கு வெவெவேறு தலைப்புகளைக் கொடுத்து அவற்றின் கீழ் அவர்கள் அவ்விராட்சியத்தின் பிரசைகளாக பாவனை செய்து தமது இராட்சியத்தைப் பற்றிய தொலைக்காட்சி நிகழ்வுகளைத் தயாரித்துப் பங்கேற்கச் செய்தல்
- இவ்விராட்சியத்தின் மன்னர்களின் அரசியல், பொருளாதார, சமய இலக்கியப் பணிகளை தனித்தனியாக அல்லது தொகுதியாக அட்டவணைப்படுத்தல்.

**வினா 05**

**நோக்கம்:** போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் ஆட்சியைக் கைப்பற்றும் போது உள்நாட்டு அரசர்கள் செயற்பட்ட விதம் பற்றியதாகும். இவ்வினாவினை 48%மான மாணவர்களே தேர்ந்தெடுத்துள்ளனர்.

**5.** "இலங்கையில் போர்த்துக்கேய அதிகாரத்தையும் ஒல்லாந்த அதிகாரத்தையும் சில சந்தர்ப்பங்களில் ஒரு சிறிய பிரதேசத்திற்கு மட்டுப்படுத்துவதில் வெற்றியீட்டியபோதிலும் வெளியிலிருந்து உதவியைப் பெறாமல் அவர்களுடைய ஆதிக்கத்தை முற்றாக ஒழிப்பதற்கு உள்நாட்டு ஆட்சியாளர்களுக்கு முடியாதிருந்தது."

(i) *A.* கி.பி. 1505 இல் லொறென்சோ த அல்மேடா உட்பட்ட போர்த்துக்கேயக் குழு வந்தபோது கோட்டையில் ஆட்சிசெய்த அரசர்

*B.* கி.பி. 1602 இல் ஜோரிஸ் வான் ஸ்பீல்பேர்ஜன் என்ற ஒல்லாந்தர் இலங்கைக்கு வந்தபோது கண்டியில் ஆட்சிசெய்த அரசர்

*C.* கி.பி. 1762 இல் ஜோன் பைபஸ் என்ற ஆங்கிலேயர் ஒரு தூதுப் பணிக்காக இலங்கைக்கு வந்தபோது கண்டியில் ஆட்சிசெய்த அரசர்

மேலே *A, B, C* ஆகியவற்றினால் குறிப்பிடப்படும் ஒவ்வோர் அரசரினதும் பெயரைக் கீழே அடைப்புக் குறிகளினுள்ளேயிருந்து தெரிந்தெடுத்து முறையே எழுதுக.

**(டொன் யுவன் தர்மபாலா/IX ஆம் தர்ம பராக்கிரமபாகு /I ஆம் விமலதர்மசூரியா /II ஆம் ராஜசிங்கன் / கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன்/ ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன்)** (03 புள்ளிகள்)

(ii) *A.* கண்டி இராச்சியத்தின் மீது படையெடுத்த போர்த்துக்கேயக் கப்ரின் ஜெனரல்கள் **இருவரைக்** குறிப்பிடுக.

*B.* இலங்கையின் கடற்கரைப் பிரதேசங்களில் ஆட்சிசெய்த **இரு** ஒல்லாந்த ஆளுநர்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இலங்கையின் கடற்கரைப் பிரதேசங்களில் போர்த்துக்கேய அதிகாரத்தை முற்றாக ஒழிப்பதற்குக் கோட்டை ஆட்சியாளருக்கும் சீதாவக்கை ஆட்சியாளருக்கும் ஏன் முடியாமல் இருந்தது என்பதை **இரு** விடயங்களைக் கொண்டு விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) கி.பி. 1766 இல் ஒல்லாந்தருடன் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க அரசர் கைச்சாத்திட்ட உடன்படிக்கை கண்டி இராச்சியத்திற்குப் பிரதிகூலமாக இருந்த விதத்தை **மூன்று** விடயங்களைக் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

(ஆ) (i)
A - IX ஆம் தர்ம பராக்கிரமபாகு
B - I ஆம் விமலதர்மசூரியன்
C - கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் **(1 x 3 = 03 புள்ளிகள்)**

(ii)
A - கேரோ லொபெஸ் டீ சூசா / டொன் ஜெரணிமோ டி அசவிடோ / கொன்ஸ்ரன்ரைன் டி சூஸா / டியோகோ டி மெலோ
B - பன் எக் / பன் கூன்ஸ் / ரைக்குளோக் பன் கூன்ஸ் / பன் எங்கல்பெக் / விலன்பல்க் / லோறன்ஸ் ஸ்பில் / பன் இம் கோப்

(iii) இயலாமைக்கான காரணிகள்.
- பலம்வாய்ந்த கடற்படை இல்லாமை
- போர்த்துக்கேசரின் இராணுவபலம்
- உள்நாட்டு மன்னர்களின் ஒற்றுமையின்மை
- போர்த்துக்கேயரின் ஆயுதபலம்
- போர்த்துகீசர் உள்நாட்டவரிடம் இருந்து பெற்ற அனுசரணை
- கோட்டை அரசின் ஆதிக்கம் அவர்களின் கையில் இருந்தமை.

காரணத்துக்கு - 03 புள்ளிகள்
விளக்கத்துக்கு - 03 புள்ளிகள்
மொத்தப் புள்ளி - 06 புள்ளிகள்

(iv) கண்டி இராச்சியத்துக்குப் பிரதிகூலமாக இருந்தமை.

- துறைமுகங்களின் உரிமை ஒப்பந்த அடிப்படையில் ஒல்லாந்தர் கையில் இருந்தமை.
- கடற்கரையில் இருந்து 04 மைல் தூரப் பிரதேசம் ஒல்லாந்தர் கைகளில் இருந்தமை
- கறுவா வியாபார ஏகபோக உரிமை ஒல்லாந்தர் வசமானதால் உள்நாட்டு மன்னர் வருமானம் அற்றுப்போனது.
- மலைநாட்டுக்கும் கரையோரத்துக்குமிடையிலான வர்த்தகம் இல்லாமல் போனது (உதாரணம் - உப்பு)

காரணத்துக்கு - 03 புள்ளிகள்
விளக்கத்துக்கு - 03 புள்ளிகள்
மொத்தப் புள்ளி - 06 புள்ளிகள்

## விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்

போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் ஆட்சியைக் கைப்பற்றும் போது உள்நாட்டு அரசர்கள் செயற்பட்ட விதம் தொடர்பான அறிவைப் பரீட்சித்தலே இவ்வினாவின் நோக்கமாகும்.
இக்கேள்வியினைத் தேர்ந்தெடுத்தோர் தொகை ஒப்பீட்டளவில் குறைவான தொகையினராகும். இவ்வினாவுக்கு மொத்தப் புள்ளி 18 ஆகும். இவற்றுள் 0-4 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 68% மாகவும் 5-9 வரையிலான புள்ளிகள் பெற்றவர்கள் 21%மாகவும் 10-13 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 8%மாகவும் 14-18 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 4%மாகவும் காணப்படுகின்றனர் (வரைபு 3)
(i) A வினாவிற்கு 12% த்தினரும் B வினாவிற்கு 27% த்தினரும் C வினாவிற்கு 51% த்தினரும் சிறப்பாக விடையளித்துள்ளனர். (ii) A, B வினாக்களுக்கு முறையே 8%, 11%க்கு குறைவானவர்களே சரியான விடையளித்துள்ளனர். விளக்க வினாவான (iii) ஆம் வினாவிற்கு 31% த்தினர் சரியாக விடையளித்துள்ளதுடன் (iv)ஆம் வினாவிற்கு 20% த்தினர் மட்டுமே சிறப்பாக விடையளித்துள்ளனர்.
**(ii)** A வினாவிற்கு சரியாக விடையளித்தோர் வீதம் வீழ்ச்சியடைந்தமைக்குக் காரணம் போர்த்துக்கேய கப்டன் ஜெனரல்களின் பெயர்களை ஞாபகமீட்டல் செய்வதில் போதிய பயிற்சியின்மையே எனலாம். அதேபோன்று ஒல்லாந்தர் ஆளுநர்களின் பெயர்களையும் மீள நினைவுபடுத்துவதில் மாணவர்களிடம் ஆற்றல் குறைவாக இருப்பதே ஆகும். அத்தோடு ஐரோப்பிய பெயர்களை தமிழில் எழுதும் போது தெளிவின்மை காணப்படுகிறது.

- கோட்டை இராச்சியம், கண்டி இராச்சியம் தொடர்பான வரலாறு பூரணமாக வழங்கப்பட வேண்டும்
- போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் வருகையின் நோக்கம், அக்காலத்தில் இவ்விரு இராச்சியங்களின் அரசியல், பொருளாதார சூழ்நிலைகள், கைப்பற்றியதற்கான முயற்சிகள், வெற்றி தோல்விக்கான காரணங்கள் பற்றிய சுவைபட கதையாக்குதல்.
- தொல்பொருட் காட்சிச்சாலைகளுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் அவற்றை மேலும் தெளிவுபடுத்திக் கொள்ளச் செய்தல்.

**வினா 06**

**நோக்கம்:** பிரித்தானியர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் சீர்திருத்தங்களுக்கும் சமகால அரசியல் அமைப்புக்களுக்குமான படிமுறைப் போக்கை ஒப்பிட்டு ஆராய்வது தொடர்பானதாகும்.

**6.** (i) *பின்வரும் விடயங்களுடன் தொடர்புபட்டவர்களின் பெயர்களை A, B, C என்னும் ஒழுங்கில் எழுதுக.*

*A. கி.பி. 1910 இல் படித்த இலங்கையர்களின் வாக்கின் மூலம் சட்டக் கழகத்திற்குத் தெரிந்தெடுக்கப்பட்டவர்.*

*B. இலங்கைப் பாராளுமன்றத்தின் முதல் பிரதமர்*

*C. இலங்கையின் முதல் நிறைவேற்று சனாதிபதி* (03 புள்ளிகள்)

(ii) *கோல்புரூக் சீர்திருத்த யோசனைகளுக்கேற்ப இலங்கையில் ஏற்பட்ட* **இரு** *மாற்றங்களைக் குறிப்பிடுக.* (04 புள்ளிகள்)

(iii) *டொனமூர் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களின் மூலம் வழங்கப்பட்ட அரசியலமைப்பு அரைகுறையான பொறுப்புகள் உள்ள நிருவாகமாக ஏன் கருதப்படுகின்றது என்பதை* **இரு** *காரணங்கள் தந்து விவரிக்க.* (05 புள்ளிகள்)

(iv) *கி.பி. 1978 இன் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களின் மூலம் அறிமுகஞ்செய்யப்பட்ட* **மூன்று** *புதிய பிரதிநிதித்துவ முறைகளைச் சுருக்கமாக விவரிக்க.* (06 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(i) A - சேர். பொன். இராமநாதன்
B - பிரமர் D. S. சேனநாயக்க
C - J. R. ஜயவர்த்தன **(1 x 3 = 03 புள்ளிகள்)**

(ii) கரையோரம், மலையகம் என்ற பிரதேசப் பிரிவுகள் நீக்கப்பட்டு நாடு ஒரே ஆட்சி முறைக்குக் கீழ் கொண்டுவரப்படல்.

- இலங்கை 05 மாகாண ஆட்சிமுறைக்குக் கீழ் கொண்டுவரப்படல்
- சிவில் நிர்வாகம் சீர்செய்யப்படுதல்.
- சுதேசமக்கள் ஆங்கிலக் கல்வியின் ஊடாக நிர்வாகத்தில் பங்கெடுத்தல்.
- சட்டவாக்கக் கழகம், சட்ட நிர்வாகக் கழகம்
- இராஜகாரிய முறைமை நீக்கப்படல்
- வர்த்தக ஏகபோக உரிமை நீக்கப்படல்.

(iii) அரைகுறை பொறுப்புள்ள நிர்வாகமாக கருதப்பட்டதற்கான காரணிகள்.

- பிரதம, நிதி, நீதிச் செயலாளர் பதவிகள் ஐரோப்பியர்களிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தன.
- ஏழு நிர்வாகக் குழுக்களின் ஊடாக சுதேசிகள் ஆசியாவில் பங்கெடுத்தபோதும் அவர்களுக்கான பொறுப்புக்கள் காணப்படவில்லை.
- ஆள்பதி, மூன்று காரியதரிசுகளுடன் இணைந்து பக்கச்சார்பாக நடந்து கொண்டார்.

காரணத்துக்கு - 02 புள்ளிகள்
விளக்கத்துக்கு - 03 புள்ளிகள்
மொத்தப் புள்ளி - 05 புள்ளிகள்

(iv) புதிய பிரதிநிதித்துவ முறைகள்

- சனாதிபதித் தேர்தல்
- விகிதாசார பிரதிநிதித்துவம்
- மக்கள் தீர்ப்பு பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு

இவை பற்றிச் சுருக்கமாக விளக்கம் தரப்பட்டிருத்தல் வேண்டும்

**(3 x 2 = 06 புள்ளிகள்)**

## விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்

இவ்வினாவினை 23% த்தினர் தெரிவுசெய்துள்ளனர். (வரைபு 2)
இவ்வினாவுக்கு மொத்தப் புள்ளி 18 ஆகும். இவற்றுள் 0-4 வரையான புள்ளிகள் பெற்ற மாணவர்கள் 67% மாகவும், 5-9 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 22% மாகவும் 10-13 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 8%மாகவும் 14-18 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 3%மாகவும் காணப்படுகின்றனர். (வரைபு 3)
(i) A வினாவிற்கு 38% த்தினரும் B வினாவிற்கு 58% த்தினரும் C வினாவிற்கு 48% த்தினரும் சரியாக விடையளித்துள்ளனர்.
(ii) உப வினாவிற்கு 24% த்தினரும் (iii), (iv) ஆகிய வினாக்களுக்கு 11% த்தினரும் சரியான விடையளித்துள்ளனர்.
காரணம் மாணவர்களுக்கு இலங்கையின் அரசியலமைப்புச் சீர்த்திருத்தங்கள் தொடர்பான தெளிவானதும் ஆழமானதுமான விளக்கமின்மையாகும்.

- மினி பாராளுமன்றம் (சிறுவர் பாராளுமன்றம்) நடாத்தல் , மரவுரிப்படங்கள் வரையச் செய்தல், தேசிய அரசியல் தலைவர்கள் பற்றி சிறு கட்டுரைகள் பத்திரிகைகளுக்குப் பிரசுரிப்பதற்காக எழுதியனுப்புதல்.
- அரசியல் யாப்புக்களை ஒரேபார்வையில் அட்டவணைப்படுத்தல்.
- இது தொடர்பான இறுவெட்டுக்கள் தயாரித்தல், போட்டிகள் நடத்துதல்.

## வினா 07

**நோக்கம்:** இந்திய வரலாற்றின் அரசியல், பொருளாதார சமூகத் துறைகளில் ஒரு புதிய ஆரம்பத்தை ஏற்படுத்திய வைதீகக் காலம் தொடர்பானதாகும்.

**பகுதி III**

**7.** *"வைதீகக் காலம் இந்திய வரலாற்றின் அரசியல், பொருளாதார, சமூகத் துறைகளில் ஒரு புதிய ஆரம்பமாகக் கருதப்படலாம்."*

(i) *A.* இந்தியாவிற்குப் புலம்பெயர்ந்த ஆரியர்களின் தாயகமாகக் கருதப்படும் பிரதேசம்

*B.* இந்தியாவிற்கான பெரும்பாலான புலம்பெயர்வுகளும் படையெடுப்புகளும் நடைபெற்ற, வடமேற்கில் உள்ள கணவாய்

*C.* ஆரியக் குடியிருப்புகள் தென்னிந்தியப் பிரதேசங்களை நோக்கி விரிவடைந்தபோது தடையாக இருந்த மலைத் தொடர்

மேலே குறிப்பிட்ட *A, B, C* ஆகியவற்றுக்குரிய விடையைக் கீழே உள்ள பட்டியலிலிருந்து தெரிந்தெடுத்து அதே ஒழுங்கில் எழுதுக.

**(ஸ்ரெப்ஸ், கைபர், போலான், விந்தியம், இந்துக் குஷ், பாமீர்)** (03 புள்ளிகள்)

(ii) இந்தியாவிற்குப் புலம்பெயர்ந்த ஆரியக் குடியிருப்பாளர்கள் தொடர்பான தகவல்களை அறியக்கூடிய **நான்கு** வேத நூல்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) ஆரியர்கள் கி.மு. ஆறாம் நூற்றாண்டளவில் இந்தியாவில் பரவியிருந்த விதத்தைச் சுருக்கமாகக் காட்டுக. (05 புள்ளிகள்)

(iv) வைதிகக் காலத்தில் இருந்த இந்திய மக்களின் வாழ்க்கையைப் பின்வரும் *A, B* என்னும் துறைகளின் கீழ் விளக்குக.

*A.* பொருளாதாரம்

*B.* சமூக ஒழுங்கமைப்பு (06 புள்ளிகள்)

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

(i) A - ஸ்ரெப்ஸ்
B - கைபர்
C - விந்தியம் **(1 x 3 = 03 புள்ளிகள்)**

(ii) இருக்கு
- யசூர்
- சாமம்
- அதர்வணம்

(iii) ஆரியர் இந்தியாவில் பரவியிருந்த முறைமை
- ஆரம்பத்தில் சப்த சிந்து நதிக்கரைகளை அண்மித்து வசித்தனர்
- கங்கை நதிச்சமவெளிகளில் அவர்கள் குடியிருப்புக்கள் விரிவுபட்டன.
- தெற்கே விந்தியமலைவரை அவர்கள் குடியிருப்புக்கள் பரவின.
- கி. மு. 6 ஆம் நூற்றாண்டளவில் புகழ்மிக்க 16 இராச்சியப் பிரிவுகளின் தோற்றமும் அவர்களின் பரவுகையும்.

**(2 + 3 = 05 புள்ளிகள்)**

(iv) A. பொருளாதாரக் காரணிகள்
- பிரதான வாழ்வாதாரமான தொழிலாக விவசாயம் காணப்பட்டது.
- விலங்கு வளர்ப்பு :- மாடு வளர்ப்பு பிரதான தொழிலாகக் காணப்பட்டது.
- கிராமிய மட்டத்தில் பல்வேறு கைத்தொழில்கள்
- ஆபரணங்கள்
- விவசாய உபகரணங்கள்
- மட்பாண்டங்கள்
  - வர்த்தகம் ஓரளவு விருத்தி அடைந்து காணப்பட்டது. (பண்டமாற்று முறையுடன் ஓரளவு பணம் பயன்படுத்தப்பட்டது.)
  - போக்குவரத்துக்கு ஆறுகளும், பாதைகளும் பயன்படுத்தப்பட்டன.

B. சமூக ஒழுங்கமைப்பு
- குடும்பம் சமூகத்தின் சிறிய அலகாகக் காணப்பட்டது.
- குடும்பத்தின் தலைவனாக தந்தை காணப்பட்டார்
- பல குடும்பங்கள் சேர்ந்து கோத்திரம் உருவாகுவதுடன் பின்னர் அவை அரசுகளாகத் தோற்றம் பெற்றன.
- வைதீக அடிப்படையில் குலபேதம் (வர்ணாச்சிரமம் உருவாகியமை)
- அரசியல் கலைகள் வளர்ச்சியடைந்தன.
  விளையாட்டு / நடனம் / நாடகம் / சங்கீதம் / விழாக்கள்

**(3 + 3 = 06 புள்ளிகள்)**

## விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்

இவ்வினாவினை 66% மான மாணவர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். (வரைபு 2).
இவ்வினாவுக்கு மொத்தப் புள்ளி 18 ஆகும். வரைபு 3 இன் படி 0-4 வரையான புள்ளிகள் பெற்றவரகள் 36%மாகவும் 5-9 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 33%மாகவும், 10-13 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 21%மாகவும் 14-18 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 11%மாகவும் காணப்படுகின்றனர்.

இவ்வினாவின் (i) A வினாவிற்கு 76% னரும் B வினாவிற்கு 85% வீத்தினரும் C வினாவிற்கு 48% த்தினரும் சரியாக விடையளித்துள்ளனர். ஏழாம் வினாவின் (i) A, B, C வினாக்களுக்கு அதிகூடிய வீத்தினர் சரியான விடையினை அளித்துள்ளனர்.
(ii) வினாவிற்கு 40% த்தினரும் (iii) வினாவிற்கு 32% த்தினரும் சரியாக விடையளித்துள்ளனர். (iv) A வினாவிற்கு 53% த்தினரும் சரியாக விடையளித்துள்ளனர்.

- இந்திய தேசப்படத்தின் (புராதன/ நவீன) உதவியுடன் இப்பகுதிகள் கற்பிக்கப்படல் வேண்டும்
- அவ்வரலாற்று இடங்களுக்கு படங்களுடாக களப்பயணங்கள் மேற்கொள்ளல்.
- பண்டைய இந்திய மக்களின் வாழ்க்கை முறைகளை நடித்துக் காட்டச் செய்தல்.

**வினா 08**

**நோக்கம்:** எட்டாம் வினா இந்தியாவில் பிரித்தானியர் ஆட்சியும் சுதந்திரப் போராட்டமும் பற்றிய விமர்சன ரீதியான அறிவை மாணவர் வெளிப்படுத்தல் தொடர்பானதாகும்.

**8.** ''*பிரித்தானியர்கள் இந்தியாவில் பின்பற்றிய கொள்கைகள் இந்தியர்களிடம் பிரித்தானியாவிற்கு எதிரான மனப்பாங்குகள் உருவாவதில் மிகவும் செல்வாக்குச் செலுத்திய அதே வேளை இந்தியர்கள் சுதந்திர இயக்கத்தை ஒழுங்கான முறையில் உருவாக்குவதற்கும் உதவின.*''

(i) *A.* 1857 மே 10

*B.* 1947 ஒகஸ்ற் 14

*C.* 1950 யனவரி 26

மேற்குறித்த மூன்று தேதிகளும் இந்திய வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தனவாக இருப்பதற்கு ஏதுவான மூன்று நிகழ்ச்சிகளைக் கீழே அடைப்புக்குறிகளினுள்ளேயிருந்து தெரிந்தெடுத்து முறையே எழுதுக.

**(வேறு இராச்சியமாகப் பாகிஸ்தான் உருவாதல்/சிப்பாய்க் கலகத்தின் ஆரம்பம்/புதிய இந்திய அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்படுதல்/இந்தியாவிற்குப் பிரித்தானிய ஆதிக்கத்திலிருந்து சுதந்திரம் கிடைத்தல்/இந்தியத் தேசிய காங்கிரஸ் அமைக்கப்படுதல்)** (03 புள்ளிகள்)

(ii) *A.* இந்தியத் தேசிய காங்கிரசின் **இரு** மிதவாதத் தலைவர்கள்

*B.* **இரு** தீவிரவாதத் தலைவர்கள்

ஆகியோரை *A, B* என்னும் ஒழுங்கில் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) பிரித்தானிய ஆதிக்கத்திற்கு எதிராக இந்தியாவில் ஒழுங்கமைந்த ஒரு தேசிய இயக்கத்தை ஆரம்பிப்பதில் செல்வாக்குச் செலுத்திய **இரு** காரணங்களை விவரிக்க. (05 புள்ளிகள்)

(iv) இந்தியச் சுதந்திரப் போராட்டத்தின் உயிர்ப்பான தலைவராக மகாத்மாகாந்தியின் பங்களிப்பை **மூன்று** விடயங்களைக் கொண்டு விவரிக்க. (06 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(i) A - சிப்பாய்க் கலகத்தின் ஆரம்பம்

B - வேறு இராச்சியமாகப் பாகிஸ்த்தான் உருவாதல்

C - புதிய இந்திய அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்படல் **(1 x 3 = 03 புள்ளிகள்)**

(ii) A - மிதவாதத் தலைவர்கள்

- தடாபாய் நபரோஜி
- சுரேந்திரநாத் பாணர்ஜி
- கோபாலகிருஷ்ண கோகிலே **(1 x 2 = 02 புள்ளிகள்)**

B - தீவிரவாதத் தலைவர்கள்

- பால கங்காதர திலகர்
- சுபாஸ் சந்திரபோல்
- லாலா ஸ்பதிராய் **(1 x 2 = 02 புள்ளிகள்)**

(2 + 2 = 04 புள்ளிகள்)

(iii) தேசிய இயக்க ஆரம்பத்திற்கு செல்வாக்குச் செலுத்திய காரணங்கள்.

★ பிரித்தானியர் இந்தியாவில் பின்பற்றிய கொள்கைகள்

- விவசாயக் கொள்கைகள்

  அதிகளவு நிலவரியை அதிகரித்தமையால் தன்னிறைவுப் பொருளாதாரம் வீழ்ச்சியடைவதுடன் மக்கள் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தல்

- கைத்தொழில்

  இந்தியாவின் செல்வங்களைத் தமது நாட்டுக்கு எடுத்துச் செல்லலும், வர்த்தக சமூகம் ஒன்றை உருவாக்குதலும், குறைந்த வேதனத்துக்கு இந்தியத் தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்ள முயன்றமையும், தொழிலாளர் சுரண்டலும், தேசிய கைத்தொழிலில் நாட்டம் காட்டாமையும்.

- இந்தியாவில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட பட்டினியால் பெருந்தொகையானோர் இறந்தனர். உதாரணமாக வங்காளத்தில் 35 லட்சம் மக்கள் இறந்தனர்.
- மேற்கத்திய கல்வி முறைமை

★ ஆங்கிலக் கல்வியைக் கற்றதால் மத்தியதர வர்க்கத்தின் தோற்றமும், அவர்களின் எழுச்சியும்

★ பல்வேறு மொழியுள்ள இந்தியாவில் ஆங்கிலக் கல்வி கற்பிக்கப்பட்டமை பிரித்தானியருக்கு மட்டும் நன்மை பயக்கவில்லை. மாறாக தமது தேசிய இயக்கத்துக்கும் அதைப் பயன்படுத்தினர்.

★ உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்பட்டமையால் இந்திய ஒருமைப்பாடு தோற்றம் பெற்றது.

★ பிரித்தானியரின் அகங்காரமும் இந்தியரைப் புறக்கணித்தமையும், சட்டத்தின் முன் இந்தியர்கள் சமமாகக் கொள்ளப்படாமையும், இந்தியன் என்னும் உணர்வை வலுவடையச் செய்தது.

காரணத்துக்கு 02 புள்ளிகள்
விளக்கம் 03 புள்ளிகள்
மொத்தம் 05 புள்ளிகள்

(iv) மகத்மா காந்தியின் பங்களிப்பு

★ சத்தியாக்கிரகம்
- இந்தியத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தும் போது அவர்களுக்கு வழங்கப்பட்ட உறுதி மொழிகளை இல்லாதொழித்தபோது, மக்களை ஐக்கியப்படுத்தி சத்தியாக்கிரக போராட்டத்தை முன்னெடுத்தல்.

★ ஒத்துழையாமை இயக்கம்
- நீதிமன்றம், சட்டவாக்கக்கழகம், பாடசாலைகள் போன்ற இடங்களில் பிரித்தானியர் பொருட்களையும் நிர்வாகத்தையும் நிராகரித்தல்
- பிரித்தானியரின் கௌரவப்பட்டங்களைப் புறக்கணித்தமை
- உள்ளூர் உற்பத்திக்கு முக்கியம் தரல்
- இந்து - முஸ்லிம் உறவை வலுப்படுத்தல்

★ கீழ்ப்படியாமை
- சட்ட மீறல் இயக்கத்தை நடாத்துதல்
- தண்டிப் பாதை யாத்திரை (உப்பு வரி)

★ வெள்ளையனே வெளியேறு இயக்கம்

★ இந்திய தேசிய காங்கிரசுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையேயான சிம்லா ஒப்பந்தம்

எதிர்பார்ப்பு : இங்கிலாந்தில் ஆரம்பமான கைத்தொழிற்புரட்சி உலகத்தில் பல நாடுகளின் பொருளாதார, அரசியல், சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்களை மாணவர் வெளிப்படுத்துவர்.

காரணத்துக்கு 02 புள்ளிகள்
விளக்கம் 03 புள்ளிகள்
மொத்தம் 05 புள்ளிகள்

## விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்

இவ்வினாவினை 30%மான மாணவர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். (வரைபு 2)
குறைவான வீதமான மாணவர்களே இவ்வினாவினை தேர்ந்தெடுத்துள்னர். இவ்வினாவுக்கு மொத்தப் புள்ளி 18 ஆகும். இவற்றுள் 0-4 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 55% மாகவும் 5-9 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 20%மாகவும் 10-13 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 14% மாகவும் 14-18 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 12% மாகவும் காணப்படுகின்றன.(வரைபு 3)
இவ்வினாவின் (i) A உப வினாவிற்கு 68%த்தினரும் B வினாவிற்கு 31%த்தினரும் C வினாவிற்கு 44%த்தினரும் உப வினா (ii) பிரிவுக்கு A இற்கு 44%த்தினரும் B இற்கு 31% த்தினரும் சரியாக விடையளித்துள்ளனர்.

இவ்வினாவின் (iii), ஆம் (iv) ஆம் பிரிவுகளுக்கு முறையே 29% த்தினரும், 37% த்தினரும் சிறப்பாக விடையளித்ததுள்ளனர். காரணம் இந்திய சுதந்திரப் போராட்டம் தொடர்பான விரிவான அறிவின்மையும் விளக்கம் அளிக்கும் ஆற்றல் குறைவாக இருப்பதுமேயாகும்.

- மிக அண்மைய வரலாறு என்பதால் அவை தொடர்பாக தகவல்கள் ஏறாளமாகப் பெற்றுக்கொள்ள முடியும்
- விவாதம், பட்டிமன்றம், கருத்தரங்குகளை நடாத்துவதன் மூலம் மேலதிக அறிவையும் பிரயோகிக்கும் திறனையும் வளர்க்கலாம்.
- பொருத்தமான வளவாளர்களின் உதவிகளை வெளியிலிருந்து பெற்று பட்டறைகள், கலந்துரையாடல்கள், நடாத்துவது இப்பகுதிகளுக்கு சிறப்பான கற்பித்தல் முறையாகும்.

### வினா 09

**நோக்கம்:** இங்கிலாந்தில் ஆரம்பமான கைத்தொழில் புரட்சி உலகத்தில் பல நாடுகளின் பொருளாதார, அரசியல், சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பானதாகும்.

**9.** *"இங்கிலாந்தில் தொடங்கிய கைத்தொழில் புரட்சி குறுகிய காலத்தில் உலகின் பல நாடுகளுக்குப் பரவிய அதே வேளை அது அரசியல், பொருளாதார, சமூகத் துறைகளில் மிகவும் செல்வாக்குச் செலுத்தியது."*

(i) *இங்கிலாந்தில் தொடங்கிய கைத்தொழில் புரட்சி குறுகிய காலத்தில் ஐரோப்பாவின் ஏனைய நாடுகளுக்கும் பரவியது. அது அவ்வாறு பரவிய* ***மூன்று*** *ஐரோப்பிய நாடுகளைக் குறிப்பிடுக.* (03 புள்ளிகள்)

(ii) *கைத்தொழில் புரட்சியின்போது உற்பத்தி செய்யப்பட்ட சில புதிய ஆக்கங்கள் A, B, C, D ஆகியவற்றின் கீழ் காணப்படுகின்றன. அவற்றை உற்பத்தி செய்தவர்களின் பெயர்களை அடைப்புக்குறிகளினுள்ளேயிருந்து தெரிந்தெடுத்து முறையே காட்டுக.*

*A.* ஆகாயவிமானம்
*B.* தையல் பொறி
*C.* நீராவிப் புகையிரத எஞ்சின்
*D.* மோட்டர் வாகனம்

**(அலெக்சான்டர் கிரகாம் பெல், றைற் சகோதரர்கள், ஜோர்ஜ் ஸ்ரீவின்சன், ஜேம்ஸ் வாற், டெம்லர், ஜோன் மக்கடம், சாமுவேல் மோர்ஸ்)** (04 புள்ளிகள்)

(iii) *பத்தொன்பதாம் நூற்றாண்டிலே ஐரோப்பிய நாடுகளில் கைத்தொழில்மயவாக்கம் பரவியதில் செல்வாக்குச் செலுத்திய* ***இரு*** *காரணங்களை விவரிக்க.* (05 புள்ளிகள்)

(iv) *கைத்தொழில் புரட்சி காரணமாகப் பொருளாதார, சமூகத் துறைகளில் ஏற்பட்ட* ***மூன்று*** *மாற்றங்களை விவரிக்க.* (06 புள்ளிகள்)

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

(i) பிரான்ஸ், ஜெர்மனி, பெல்ஜியம், அவுஸ்திரியா, பிரஷியா **(1 x 3 = 03 புள்ளிகள்)**

(ii) A - றைற் சகோதரர்கள்

B - எலியஸ் கோங்

C - ஜோர்ஜ் ஸ்டீவன்சன்

D - டெம்லர் **(1 x 4 = 04 புள்ளிகள்)**

(iii) கைத்தொழில் மயமாக்குவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்

- ★ ஐரோப்பாவின் சனத்தொகை வேகமாய் அதிகரித்தது.
- ★ ஐரோப்பாவுக்குள் போக்குவரத்து வசதிகள் விருத்தி - அவுஸ்திரியாவில் 30 000 மைல் நீள வீதி அமைப்பு
  பெல்ஜியத்தின் வீதிகள் இரட்டிப்பாக அதிகரித்தமை
  பிரான்ஸில் வீதிகளும் கால்வாய்ப் போக்குவரத்தும் விருத்தியடைந்தமை.
  கி. பி. 1840 ல் எல்லா நாடுகளிலும் புகையிரதப் போக்குவரத்து விருத்தியடைந்தமை.
- ★ வர்த்தகத்துக்குப் பொருத்தமான வகையில் சட்ட திட்டங்கள் மறுசீர் அமைக்கப்பட்டமை.
- ★ கைத்தொழிலுக்கும் போக்குவரத்து விருத்திக்கும் அரசாங்கங்களின் ஆதரவு கிடைத்தமை
- ★ யுத்தத்தின் காரணமாக இங்கிலாந்தில் பருத்திக் கைத்தொழில் பாதிக்கப்பட்டமையால் ஐரோப்பாவில் புதிய ரோமங்களுக்கான கேள்வி அதிகரித்தது.
- ★ வரிச்சலுகை அளிக்கப்பட்டதனால் இலகுவில மூலப்பொருட்களைப் பெறக்கூடியதாக இருந்தன.
- ★ பிரான்சிலும் ஜேர்மனியிலும் நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டன.
- ★ ஐரோப்பிய நாடுகளுக்கு குடியேற்றங்கள் அதிகமாக காணப்பட்டதால் அந்நாடுகளில் இருந்து மூலப்பொருட்களைப் பெற முடிந்தது.

காரணத்துக்கு 02 புள்ளிகள்
விளக்கம் 03 புள்ளிகள்
மொத்தம் 05 புள்ளிகள்

(iv) மூன்று மாற்றங்கள் முறையே

பொருளாதாரத் துறையில்,

- கைத்தொழில் பொருட்கள் அதிகரிப்பு
- வணிகச் செயற்பாடுகள் முனைப்புப் பெற்றன.
- ஏற்றுமதி - இறக்குமதி முறைமை வளர்ச்சியடைந்தது.
- விவசாய மூலப்பொருட்கள் கைத்தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டமை
- சிறிய விவசாயிகள் நகரத்தை நோக்கிப் புலம்பெயர்வு (நிலவடைப்பு)
- வர்த்தக நடவடிக்கைகள் விருத்தியடைந்தமையால் மூலதனம் தொடர்பான விரிவான கட்டமைப்பு ஒன்று விருத்தியடைதல் (வங்கிகள்)
- பல்தேசியக் கம்பனிகளின் தோற்றம்
- பணம், வங்கி செயற்பாடுகள் மேம்பாடடைதல்

சமூகச் செயற்பாடுகள்

- நகரச் சனத்தொகை அதிகரிப்பும் பாரிய நகரங்கள் தோற்றம் பெறலும்.
- கைத்தொழிற்சாலைகள் தோற்றம் பெற்றதால் கைத்தொழிற்சாலைகளுக்கு அண்மையில் தொழில்புரியும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் வசிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- கைத்தொழிற்சாலைகளுக்கு அண்மையில் சனத்தொகை அதிகரிப்பு
- சனத்தொகை அதிகரிப்புக் கேற்றவாறு 20% த்தால் அதிகரித்தபோது வீட்டு வசதிகள் 11.5% மட்டுமே அதிகரித்தது.

- சமூக வகுப்புக்கள் தோற்றம் பெற்றன.
- பெற்றோர்கள் வேலைக்குச் சென்றமையால் பிள்ளைகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கினர்.
- தொழிலாளர் வீடுகள் சிறியதாக இருந்தமையால் ஏற்பட்ட குடும்பக் கட்டமைப்புப் பிரச்சினைகள்
- சூழல் மாசடைதல்

3 காரணத்துக்கு - 03 புள்ளிகள்
விளக்கத்துக்கு - 03 புள்ளிகள்
மொத்தம் - 06 புள்ளிகள்

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**

இவ்வினாவினை 75% மான மாணவர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். (வரைபு 2)

இவ்வினாவிற்கு மொத்தப் புள்ளி 18 ஆகும். இவற்றுள் 0-4 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 41% மாகவும் 5-9 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 38% மாகவும் 10-13 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 14% மாகவும் 14-18 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 7% மாகவும் 1காணப்படுகின்றனர். (வரைபு 3).

இவ்வினாவின் (i) வினாவிற்கு 32%த்தினர் சரியாக விடையளித்துள்ளனர். இவ்வினாவின் (ii) A வினாவிற்கு 90%த்தினரும் (ii) B வினாவிற்கு 94%த்தினரும் (ii) C வினாவிற்கு 43% த்தினரும் (ii) D வினாவிற்கு 31%த்தினரும் சரியாக விடையளித்துள்ளனர். (ii) B வினாவிற்கே வரலாற்று ii பத்திரத்தில் ஆகக் கூடிய வீதத்தினர் சரியாக விடையளித்த வினாவாக விளங்குகின்றது. 9ஆம் வினாவின் (iii) வினாவிற்கு 26%த்தினரும் (iv) வினாவிற்கு 30%த்தினரும் சரியாக விடையளித்துள்ளனர்.

- நவீன கண்டுபிடிப்புகள் தொடர்பாக இணையத்தளத்தினூடாக தகவல்களைத் தேடச்செய்வது சுவாரசியமானது.
- இவற்றைப் பட்டியலாக்குவது மற்றுமொரு நுட்பமாகும்.
- புரட்சிகள் தொடர்பாக பேச்சுப் போட்டிகள் குழுக்கலந்துரையாடல்கள் ஒழுங்கு செய்வது சிறப்பானது.

**வினா 10**

**நோக்கம்:** உலகப் போர்களுக்குப் பின் உலக சமாதானம் தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட அமைப்புகளும் அதன் தாக்கங்கள் தொடர்பானதாகும்.

**10.** *“உலகப் போர்களுக்குப் பின்னர் உருவாகிய சமாதானத்திற்கான சர்வதேச அமையங்கள் நாடுகளுக்கிடையே ஏற்பட்ட பல முரண்பாடுகளைத் தீர்ப்பதில் வெற்றியீட்டிய போதிலும் பிரதான வல்லரசு நாடுகளுக்கிடையே இருந்த அதிகாரப் போராட்டத்தின் விளைவாகச் சில சமாதான முயற்சிகள் வெற்றியீட்டவில்லை.”*

(i) *A. முதலாவது உலகப் போருக்குப் பின்னர் உலகச் சமாதானத்திற்காக அமைக்கப்பட்ட அமையம்*
*B. இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் உலகச் சமாதானத்திற்காக அமைக்கப்பட்ட அமையம்*
*C. பிரசித்திபெற்ற இஸ்ரேல் இரகசிய உளவுச் சேவை*
*ஆகியவற்றை முறையே குறிப்பிடுக.* (03 புள்ளிகள்)

(ii) *A. இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் முதலாளித்துவத் தரப்பிற்குத் தலைமையை அளித்த* **இரு** *நாடுகளையும்*
*B. சமூகவுடைமைத் தரப்பிற்குத் தலைமையை அளித்த* **இரு** *நாடுகளையும்*
*குறிப்பிடுக.* (04 புள்ளிகள்)

(iii) *இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் இரு தசாப்தங்களில் இரு வல்லரசு நாடுகள் ஒன்றுக்கொன்று எதிராக ஆயுதமேந்திய போராட்டத்தில் நேரடியாக ஈடுபடாதபோதிலும் அவற்றிற்கிடையே தகராறு இருந்தமையை எடுத்துக் காட்டும்* **இரு** *நிகழ்ச்சிகளை விவரிக்க.* (05 புள்ளிகள்)

(iv) *இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலகிலே அரசியல்ரீதியில் ஏற்பட்ட* **மூன்று** *மாற்றங்களை விளக்குக.*
(06 புள்ளிகள்)

i. A. - சர்வதேச சங்கம்.
B. - ஐக்கிய நாடுகள் அமையம்
C - மொசாட்

**(1 x 3 = 03 புள்ளிகள்)**

ii. A ஐக்கிய அமெரிக்கக்குடியரசு /அமெரிக்கா/ USA
பெரிய பிரித்தானியா /இங்கிலாந்து/ UK
பிரான்ஸ்
ஜேர்மனி (மேற்கு)

B. சோவியத் ஒன்றியம் /ரஷ்யா/ (U.S.S.R)
சீனா

**(2 x 2 = 04 புள்ளிகள்)**

iii. தகராறு இருந்தமைக்கான காரணங்கள்
- பேர்ளின் பிரச்சினை
- கொரியப் பிரச்சினை
- சுயஸ்கால்வாய் பிரச்சினை
- கியுபா ஏவுகணைப் பிரச்சினை

இதில் இரண்டிற்கு போதிய விளக்கம் தரப்படல் வேண்டும்.

காரணத்துக்கு 02 புள்ளிகள்
விளக்கம் 03 புள்ளிகள்
மொத்தம் 05 புள்ளிகள்

iv. அரசியல் ரீதியில் ஏற்பட்ட மாற்றங்கள்
- கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பொதுவுடமைத் தத்துவத்தைப் பின்பற்றல்
- முதலாளித்துவ நாடுகள்/ சோசலிச நாடுகள் என நாடுகள் இரண்டாகப் பிரிவு படல்
- குடியேற்ற நாடுகள் சுதந்திரம் அடைதல்.
- நடுவுநிலைமை நாடுகள் அணிசேரா இயக்கத்துடன் புதுத்தோற்றம் பெறல்
- நேட்டோ, வோர்ஷோ அமைப்புக்களின் தோற்றம்
- இஸ்ரேல் போன்ற புதிய நாடுகளின் தோற்றம் / யூகொஸ்லேவியா
- நிரந்தரயுத்தங்கள் பனிப்போராக பரிணமித்தல்
- ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தோற்றம் பெறல்
- சீனா ஒரு கொமியூனிச பரிபாலனத்துக்கு கீழ் உருவாகுதல்.

காரணத்துக்கு 02 புள்ளிகள்
விளக்கம் 03 புள்ளிகள்
மொத்தம் 05 புள்ளிகள்

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**

இவ்வினாவினை 23% மான மாணவர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். (வரைபு 2)
இவ்வினாவுக்கு மொத்தப் புள்ளி 18 ஆகும். இவற்றுள் 0-4 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 49% மாகவும் 5-9 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 28%மாகவும் 10-13 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 14%மாகவும் 14-18 வரையான புள்ளிகள் பெற்றவர்கள் 9% மாகவும் காணப்படுகின்றனர்.

இவ்வினாவின் (i) A வினாவிற்கு 59% த்தினரும் B வினாவிற்கு 64% த்தினரும் C வினாவிற்கு 19% த்தினரும் (iv) வினாவிற்கு 33% னரும் சரியான விடையினை அளித்துள்ளனர். (ii) A வினாவிற்கு 65% த்தினரும் (ii) D வினாவிற்கு 38%த்தினரும் சரியான விடையினை அளித்துள்ளனர். (iii) வினாவிற்கு 19% னரும் (iv) வினாவிற்கு 33% னரும் சரியான விடையினை அளித்துள்ளனர். இவ்வினாவின் (iii), (iv) ஆகிய வினாக்களுக்கு குறைந்த வீதத்தினர் சரியான விடையளித்தமைக்கான காரணம் மாணவர்களுக்கு விளக்கம் அளிக்கும் ஆற்றல் குறைவாக இருப்பதினாலாகும்.

- நவீன உலக வரலாறு தொடர்பாக பல ஆங்கிலமொழித் திரைப்படங்கள் , விவரணச் சித்திரங்கள், அதிகம் உள்ளதால் அவற்றைப் பயன்படுத்துவது சிறந்த பயனைத் தரும்

- இவை தொடர்பாக மேலதிக தேடலுக்கும் உரிய தொகுப்புகளுக்கும் மாணவர்களை நூலகங்கள், பத்திரிகைகள், இணையத்தளங்களை நோக்கி வழிநடத்துவது சிறப்பான நுட்பமாகும்.

# பகுதி III

## 3.0 விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்

### 3.1. விடையளிக்கும் போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்கள்

**பொதுவானவை**

- ✶ மாணவர்கள் வினாப்பத்திரங்களிலுள்ள அறிவுறுத்தல்களை முழுமையாக, சரியாக வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும். எத்தனை வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்?, கட்டாய வினாக்கள் எவை?, நேர ஒதுக்கீடு எவ்வளவு?, புள்ளி ஒதுக்கீடு எவ்வளவு? என்பவற்றை முதலில் சரியாக விளங்கிக் கொண்டு, பின்னர் வினாக்களை சரியாக வாசித்து விளங்கி விடையளித்தல் வேண்டும்.
- ✶ முதலாம் பகுதிக்கு விடையளிக்கும்போது மிகச் சரியான ஒரு விடையைத் தெரிவுசெய்து எதிரேயுள்ள கூட்டுக்குள் தெளிவாக புள்ளடியிடல் வேண்டும்.
- ✶ இரண்டாம் வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கும்போது ஒவ்வொரு பிரதான வினாக்களையும் விடைத்தாளின் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் நன்று.
- ✶ எழுத்துக்களைப் பிழையின்றி தெளிவான கையெழுத்தில் எழுத வேண்டும்.
- ✶ ஒவ்வொரு விடைத்தாள்களின் இரு பக்கத்திலும் சுட்டெண்களைத் தெளிவாக எழுதுதல் அவசியம்.
- ✶ வினா இலக்கத்தையும் பிரிவு வினாக்களின் இலக்கங்களையும் விடை எழுத ஆரம்பிக்குமுன் தெளிவாக சரியாக குறிப்பிட வேண்டும்.
- ✶ வினாக்கள் கேட்கப்பட்டிருப்பதற்கேற்ப சுருக்கமாயும், விளக்கமாயும் விடையளித்தல் நன்று.
- ✶ வினாக்களுக்கேற்ப விடையளிக்கும்போது, தர்க்கரீதியாகவும் ஆய்வுரீதியாகவும் விடையளித்தல் வேண்டும்.

**பாடரீதியானவை**

- ★ தேசப்படங்களில் மிகச் சரியான இடத்தில் கேட்கப்பட்ட இடங்களை நுணுக்கமாகக் குறித்தல்.
- ★ குறிக்கும்போது நகரங்களாயின் புள்ளியிட்டு குறித்தல், இராச்சியங்களாயின் நிழற்றுதல், நதிகளாயின் அவற்றின் போக்கில் பெயர்களை எழுதுதல்
- ★ காரணங்கள் தந்து விளக்குகின்ற விடைகளுக்கு உதாரணங்களுடன் எழுதுதல்.
- ★ ஆண்டுகள் குறிப்பிடும்போது கி.பி. / கி.மு குறிப்பிடல் வேண்டும். குறிப்பிட்ட சரியான ஆண்டுகள் எழுதமுடியாதவிடத்து நூற்றாண்டுகளிலாவது குறிப்பிடல்.
- ★ மறுபெயர்கள் இருப்பின் அவற்றில் விடைகளில் சேர்த்துக் கொள்ளல்.

## 3.2. கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும்

- ★ நூல்கள், இணையத்தளங்களூடாக ஆசிரியர்கள் தமது வரலாற்று அறிவை விருத்தி செய்தல் அவசியமானது.

- ★ கடினமான பகுதிகளை இனங்கண்டு அப்பகுதிகளைக் கற்பிப்பதற்கு கையேடுகள் செயலட்டைகள் தயாரித்து பயன்படுத்துவது சிறந்தது.

- ★ இலகுவான கற்பித்தலுக்காக தேசப்படங்கள், வினா விடைத் தொகுப்பு, மாதிரியுருக்கள், விவரணச் சித்திரங்கள் போன்ற நுட்பங்களைப் பயன்படுத்தல் வேண்டும்.

- ★ படம் குறிப்பதில் சில நுட்பங்களைக் கையாள வேண்டும்.
  - முதலில், நதிகளை இனங்காணல்
  - அடுத்து, துறைமுகங்களையும் கடல்களையும் இனங்காணல்
  - தொடர்ந்து, முக்கியமான நகரங்களை இனங்காணல்
  - ஆரிய குடியிருப்புக்களைக் குறித்துக் கொள்ளல்
  - குளங்கள், கால்வாய்கள் என்பவற்றை வெவ்வேறு நிறங்களால் குறித்து விளக்கமளித்தல்

- ★ இடங்களை ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு இலக்கங்கள் அல்லது எழுத்துக்கள் அல்லது முதலெழுத்துக்களைக் கொண்டு சொற்றொடர்களை உருவாக்குதல் சிறப்பான நுட்பங்களாகும்.

- ★ கலைகள் (கட்டிடம், சிற்பம், ஓவியம்) ஆகியவற்றின் படங்களைச் சேகரித்து கால ஒழுங்கில் வகைப்படுத்தி ஒட்டி தகவல் களஞ்சியமாக்குதல்.